# 10ஆம் வகுப்பு – சமூக அறிவியல்
## காலக்கோடு

காலக்கோட்டினைப் பயிற்சி அளிக்கும்பொழுது தங்கள் மாணவர்களின் செயல் திறன்களுக்கு ஏற்ப நிகழ்வுகளை மாற்றிக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறது. மாணவர்கள் முழு மதிப்பெண்கள் பெறுவது மட்டும்தான் நமது நோக்கமாக இருக்க வேண்டும்.

**1) 1900 – 1920 முடிய**

1905– வங்கப்பிரிவினை

1907–சூரத் பிளவு

1909–மிண்டோ மார்லி சீர்திருத்தம்

1914–முதல் உலகப்போர் தொடக்கம்

1919–ரௌலட் சட்டம்

1920–ஒத்துழையாமை இயக்கம்

**2) 1920–1940**

1920– ஒத்துழையாமை இயக்கம்

1922–சௌரி சௌரா சம்பவம்

1927–சைமன் குழு வருகை

1930–தண்டி யாத்திரை

1935–முதல் இந்திய அரசுச்சட்டம்

1940–ஆகஸ்ட் நன்கொடை

**3) 1930–1950**

1930–தண்டி யாத்திரை

1935–இந்திய அரசுச்சட்டம்

1942–வெள்ளையனே வெளியேறு இயக்கம்

1947–இந்தியா சுதந்திரம் அடைதல்

1950–இந்தியா குடியரசு ஆதல்

### வரலாறு– வரைபடம் ( ஆசியா)

ஆசிரியர்களாகிய நாம் மாணவர்கள் நல்ல மதிப்பெண்களைப் பெறுவதற்கு வரைபடம் மற்றும் காலக் கோட்டினை மீண்டும் மீண்டும் பயிற்சி அளித்தல் மிக்க நலமுடையதாகும். வரலாறு வரைபடத்திற்கு <u>ஆசியாவில்</u> மட்டும் பயிற்சி அளிக்க வேண்டுமெனில் <u>6ஆம் பக்கத்தில்</u> உள்ள பயிற்சியை மட்டும் அளித்தால் போதும்.

**முக்கிய இடங்கள்**

1. துருக்கி, சீனா, பார்மோசா, சாகலின் தீவுகள், செங்கடல்
2. அரேபியா, பசிபிக் பெருங்கடல், ஹாங்காங், ஜப்பான், மங்கோலியா
3. ஈராக், நேபாளம், காண்டன், இந்தோனேசியா, இந்தியப்பெருங்கடல்
4. ஈரான், அரபிக்கடல், சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், பீகிங் (பெய்ஜிங்).

வரலாறு வரைபடத்திற்கு <u>இந்தியாவில்</u> மட்டும் பயிற்சி அளிக்க வேண்டுமெனில் <u>58ஆம் பக்கத்தில்</u> உள்ள பயிற்சியை மட்டும் அளித்தால் போதும்.

## புவியியல் (இந்தியா)

**கீழே கொடுக்கப்பட்டுள்ள பயிற்சிகளை மீண்டும் மீண்டும் மாற்றி மாற்றிக் கொடுத்துப் பயிற்சி செய்தல் வேண்டும்.**

**இந்திய வரைபடத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.**

1. கரும்பு, நிலக்கரி, ராணா ஆப்கட்ச், சென்னை– மும்பை ரயில்பாதை, சுந்தரவனக்காடுகள்– கொச்சி, டெல்லி, காட்வின் ஆஸ்டின், மன்னார் வளைகுடா, காப்பி.
2. நெல், இரும்பு, காம்பே, கொல்கத்தா, மகாநதி, தேயிலை, சென்னை– டில்லி ரயில்பாதை, கரிசல்மண், சோழமண்டலக்கரை, விசாகப்பட்டினம்
3. பாக்ஜல சந்தி, வங்க கடல், பருத்தி, கோதுமை, சணல், எவரெஸ்ட், மேற்கு தொடர்ச்சி மலை, தொட்டபெட்டா, மங்களூர், ஹைதராபாத்.
4. சென்னை–கொல்கத்தா ரயில்பாதை,தென்மேற்கு பருவக்காற்று வீசும் திசை,சென்னை – டெல்லி விமான வழி,மும்பை–சென்னை கடல் வழி,அந்தமான் நிக்கோபார் தீவுகள், லட்சத்தீவுகள், காண்ட்லா, மலைக்காடுகள், நரிமணம்.
5. தூத்துக்குடி, பாரதீப், ஹால்டியா, நெய்வேலி, காவிரி ஆறு, நர்மதை, தபதி, வாசனைப்பொருட்கள், டார்ஜிலிங் (தேயிலை), ஜாம்ஷெட்பூர், நாகபுரி.
6. பருத்தி, சணல், அரிசி, தேயிலை, காப்பி மற்றும் கோதுமை விளையும் இடங்கள்.

## வேறுபாடுகள் (புவியியல்)

கொடுக்கப்பட்ட வேறுபாடுகள் **சிறு மாதிரிகள்** மட்டும்தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்றவண்ணம் வேறுபாடுகளை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

### பாடம் - 1

1.

| வ.எண் | கிரீன்விச் நேரம் | இந்தியத் திட்ட நேரம் |
|---|---|---|
| 1 | உலகின் திட்ட நேரத்தை கணக்கிட உதவுகிறது. | இந்தியாவின் திட்ட நேரத்தை கணக்கிட உதவுகிறது. |
| 2 | லண்டன் வழியாகச் செல்கிறது. | அலகாபாத் வழியாகச் செல்கிறது. |

2.

| வ.எண் | மேற்குத் தொடர்ச்சிமலை | கிழக்குத் தொடர்ச்சி மலை |
|---|---|---|
| 1 | தொடர்ச்சியானது | தொடர்ச்சியற்றது |
| 2 | மேற்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. | கிழக்கு கடற்கரைக்கு இணையாகச் செல்கிறது. |

3.

| வ.எண் | காற்று மோதும் பக்கம் | காற்று மோதா பக்கம் |
|---|---|---|
| 1 | காற்று வீசும் திசையை நோக்கி உள்ள மலைச்சரிவு | மலையின் மறுபக்க சரிவு |
| 2 | மழைபெறும் பகுதி | மழை மறைவு பகுதி |

4.

| வ.எண் | தென்மேற்கு பருவக்காற்று | வடகிழக்கு பருவக்காற்று |
|---|---|---|
| 1 | ஜூன் முதல் செப்டம்பர் வரை | அக்டோபர் முதல் நவம்பர் வரை |
| 2 | மேற்கு கடற்கரைக்கு மழையை தருகிறது. | தமிழ்நாட்டிற்கு மழையை தருகிறது. |

5.

| வ.எண் | வானிலை | காலநிலை |
|---|---|---|
| 1 | ஒரு நாளைய தட்ப வெப்ப நிலை | 35 ஆண்டுகள் சராசரி வானிலை |
| 2 | மாறக்கூடியது. | மாறாதது. |

6.

| வ.எண் | லூ | நார்வெஸ்டர்ஸ் |
|---|---|---|
| 1 | கோடை காலத்தில் வீசுவது | வட இந்திய தலக்காற்று |
| 2 | வெப்பக்காற்று | மாஞ்சாரல் - இடியுடன் கூடிய மழை |

7.

| வ.எண் | பசுமை மாறா காடுகள் | பருவக்காற்று காடுகள் |
|---|---|---|
| 1 | உயர்ந்த மலைகளில் காணப்படும் | சமவெளிகளில் காணப்படுகிறது. |
| 2 | இலைகள் உதிராது. | இலைகளை உதிர்க்கும். |

8.

| வ.எண் | புதுப்பிக்கக்கூடிய வளம் | புதுப்பிக்க இயலாத வளம் |
|---|---|---|
| 1 | மீண்டும் உற்பத்தி செய்யக் கூடியது | மீண்டும் உற்பத்தி செய்ய முடியாதது. |
| 2 | சூரிய ஒளி , காற்று , நீர் | பெட்ரோலியம் , நிலக்கரி |

9.

| வ.எண் | ஏற்றுமதி | இறக்குமதி |
|---|---|---|
| 1 | உபரி பொருட்களை வெளிநாட்டிற்கு விற்பது | தேவை பொருட்களை வெளநாட்டிலிருந்து வாங்குவது |
| 2 | தேயிலை, கணினி மென்பொருள்கள் | பெட்ரோலியம் |

10.

| வ.எண் | நீர் மாசு | நில மாசு |
|---|---|---|
| 1 | நீர் மாசுபடுவது | நிலம் மாசுபடுவது |
| 2 | தொழிற்சாலை கழிவுகளால் | செயற்கை உரங்களால் மற்றும் வளமூட்டப்படுவதால் |

11.

| வ.எண் | ஒரு பயிர் சாகுபடி | இரு பயிர் சாகுபடி |
|---|---|---|
| 1 | ஓராண்டில் ஒரு பயிர் மட்டும் பயிர் செய்தல் | ஓராண்டில் இரு பயிர்கள் பயிர் செய்தல் |
| 2 | எகா : வாழை | எகா : நெல் , தானியம் |

12.

| வ.எண் | வான் வழி | நீர் வழி |
|---|---|---|
| 1 | விரைவான போக்குவரத்து | மலிவான போக்குவரத்து |
| 2 | எரிபொருள் செலவு அதிகம் | எரிபொருள் செலவு குறைவு. |

# புவியியல்

## குறு வினாக்கள்

கொடுக்கப்பட்ட வினாக்கள் சிறு மாதிரிகள் மட்டும்தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்றவண்ணம் வினாக்களை வகைப்படுத்திச் சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

1. இந்தியாவின் முக்கிய இயற்கை அமைப்பு பிரிவுகள்
    - வடக்கு மலைகள்
    - வட இந்தியச் சமவெளி
    - தீபகற்ப பீடபூமி
    - கடற்கரைச் சமவெளிகள்
    - தீவுகள்
2. இமய மலையின் முக்கியத்துவம்
    - தென்மேற்கு பருவக்காற்றினை தடுத்து நல்ல மழையை தருகிறது.
    - அந்நிய படையெடுப்பைத் தடுக்கிறது.
3. இந்தியா ஏன் துணைக்கண்டம் என்று அழைக்கப்படுகிறது?
    - ஒரு கண்டத்தில் காணப்படக் கூடிய அனைத்து இயற்கை அமைப்புகளும் இந்தியாவில் காணப்படுவதால் துணைக்கண்டம் என்று அழைக்கப்படுகிறது .
4. இந்திய தீவுக் கூட்டங்கள்
    - அந்தமான் நிக்கோபார்
    - இலட்சத்தீவுகள்
5. இந்திய காலநிலையை நிர்ணயிக்கும் காரணிகள்
    - அட்சக்கோடு தீர்க்ககோடு
    - உயரம்
    - கடலிலிருந்து தூரம்
    - காற்று
    - மலைகளின் அமைவு
6. மழைநீர் சேகரித்தல் என்றால் என்ன?
    - மழை பெய்யும் பொழுது அவற்றை சேகரித்து பிறகு பயன்படுத்துதல்.
7. இயற்கை வளம் என்றால் என்ன?
    - அன்றாட வாழ்வின் தேவையை நிறைவு செய்ய
    - இயற்கையிலிருந்து பெறப்படும் அனைத்து பொருள்களும் இயற்கை வளம் என்கிறோம்.
8. செழுமையான மண்ணில் காணப்படும் பொருட்கள்
    - நுண்ணிய சத்து, கந்தகம், குளோரின், செம்பு, இரும்பு
    - நைட்ரஜன், பொட்டாசியம் மற்றும் பாஸ்பேட்
9. இந்தியாவின் மைக்கா உற்பத்தி செய்யும் இடங்கள்
    - ஆந்திரா
    - பீகார்
    - ராஜஸ்தான்
    - ஜார்க்கண்ட்
10. தோட்டப் பயிர்கள் யாவை?
    - தேயிலை, காப்பி, ரப்பர்
11. வேளாண் தொழிலின் வகைகள் யாவை?
    - தன்னிறைவு வேளாண்மை
    - வணிக வேளாண்மை
    - பழமையான வேளாண்மை
    - தோட்ட வேளாண்மை

12. வேளாண் சார்ந்த தொழிலகங்கள் என்றால் என்ன?

- வேளாண் பொருட்களை மூலப் பொருட்களாக பயன்படுத்துவது
- பருத்தி, சணல், சர்க்கரை ஆலைகள்

13. சணல் பொருள்கள் யாவை?

- கூடாரத்துணி, சணல் பைகள், கோணிப்பைகள், கெட்டித்துணி

14. மின்னியல் கழிவு என்றால் என்ன?

- கணினி, கைபேசி, அச்சு இயந்திரங்கள், தொலைக்காட்சி பெட்டி போன்றவை பயன்படாத நிலையில் வீசப்படுவது.

15. ஒலி மாசடைதல் என்றால் என்ன?

- மனிதர்கள் மற்றும் இயந்திரங்களால் ஏற்படும் ஒலி சமநிலையை பாதிப்பது ஆகும்

16. வணிகம் என்றால் என்ன? வகைகள் யாவை?

- பொருட்களை வாங்குவதும் விற்பதும் வணிகம்
- 1.உள்நாட்டு வணிகம்  2. வெளிநாட்டு வணிகம்

17. குழாய் போக்குவரத்தின் நன்மைகள்

- நீருக்கு அடியிலும் அமைக்கலாம் -( மும்பைஹை)
- பராமரிப்பு செலவு குறைவு.

18. தகவல் போக்குவரத்து வலையமைப்பின் நன்மைகள்

- கலாச்சார ஒற்றுமையை அதிகரிக்கச் செய்கிறது.
- சமூக பொருளாதார தொடர்புகளை மேம்படுத்துகிறது.

19. தொலை நுண்ணுணர்வு என்றால் என்ன?

- புவியின் விவரங்களை தொலைவில் இருந்து சேகரிப்பது தொலை நுண்ணுணர்வு ஆகும்.

20. புவி தகவல் தொகுதி வரையறு?

- கணினி மென்கட்டளைத் தொகுப்பு , பரப்பு சார் புள்ளி விவரங்கள் ஒருங்கிணைக்கப்பட்டதாகும்.

21. பேரிடர் அபாய நேர்வு குறைப்பு வரையறு?

- ஒரு பேரிடரின் தீவிரமானது சமுதாயத்தின் மீது ஏற்படுத்தும் தாக்கம், நம் உயிர்களையும் சுற்றுச்சூழலையும் பாதுகாக்க எடுத்துக் கொள்ளும் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளாகும்.

## பத்தி வினாக்கள்

கொடுக்கப்பட்ட விடைகள் சிறு மாதிரிகள் மட்டும்தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் விடைகளை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

1. **வேற்றுமையில் ஒற்றுமை விவரி.**

**வேற்றுமை :**

- மிக உயர்ந்த மலைகள் , சிறிய சமவெளிகள்
- பல்வேறு தாவரங்கள் மற்றும் விலங்குகள்
- பல மொழிகள், பல சமயங்கள் , விழாக்கள்
- பண்பாடு , நாகரிகம் , உணவு பழக்க வழக்கங்கள்
- கலைகள் மற்றும் கட்டடங்கள்

**ஒற்றுமை :**

- போர்க்காலத்தில் இந்தியர் என்ற ஒற்றுமை
- சுதந்திரதினம், குடியரசு தினம் போன்றவற்றில் ஒருமைப்பாடு

2. **தென்மேற்குப் பருவக்காற்று ஏதேனும் ஒரு கிளை விவரி.**

தென்மேற்குப் பருவக்காற்று அரபிக்கடல் கிளை மற்றும் வங்காள விரிகுடா கிளை என இரு பிரிவுகளாக வீசுகிறது.

**அரபிக்கடல் கிளை :**

- அரபிக்கடலில் இருந்து வீசுகிறது
- மேற்குக் கடற்கரைக்கு கனமழையை கொடுக்கிறது.
- தக்காணப் பீடபூமி குறைந்த மழையை பெறுகிறது.
- ஆரவல்லி மலை காற்று வீசும் திசைக்கு இணையாக உள்ளது.
- ராஜஸ்தானுக்கு மழைப் பொழிவைத் தருவதில்லை.

3. **காடுகளின் முக்கியத்துவம் விவரி.**

- மூலப் பொருட்களைத் தருகிறது.
- மண் அரிப்பைத் தடுக்கிறது.
- விலங்குகளின் வாழிடமாக அமைகிறது.
- நிலத்தடி நீரை உயர்த்துகிறது.
- சுற்றுலா மையமாக உள்ளது.
- குடிசைத் தொழிலுக்குப் பயன்படுகிறது
- மூலிகைகள் மற்றும் மருந்து பொருட்களைத் தருகிறது.

4. **இந்தியாவின் சாலை வழிகளை விவரி.**

- கிராமச்சாலை - கிராமங்களை நகரத்துடன் இணைக்கிறது.
- மாவட்டச் சாலை - நகரங்களை மாவட்ட தலைநகரங்களுடன் இணைக்கிறது.
- மாநிலச் சாலை - மாவட்டத் தலைநகரங்களை மாநில தலைநகருடன் இணைக்கிறது.
- தேசிய நெடுஞ்சாலை - மாநில தலைநகரங்களை நாட்டின் தலைநகருடன் இணைக்கிறது.
- தங்க நாற்கர சாலை - மாபெரும் சாலை வளர்ச்சி திட்டம் (குறிப்பிட்ட நகரங்களை மட்டும் இணைக்கிறது.)
- விரைவுவழி சாலை- மாபெரும் சாலை வளர்ச்சி திட்டம் (குறிப்பிட்ட நகரங்களை மட்டும் இணைக்கிறது.)

## கூடுதல் வினாக்கள்

1. தீபகற்ப பீடபூமி – குறிப்பு வரைக
2. பருவ மழை வெடிப்பு என்பதன் பொருள்யாது?
3. மழைநீர் சேகரிப்பினை விளக்குக
4. உள்நாட்டு வணிகம் - பன்னாட்டு வணிகம்
5. தொலைநுண்ணுணர்வு நுட்ப தொகுதிகளை விவரி
6. உயிரினப்பன்மை என்றால் என்ன?
7. வேளாண் தொழிலை நிர்ணயிக்கும் காரணிகள் யாவை?
8. தன்னிறைவு வேளாண்மை – வணிக வேளாண்மை
9. வேளாண் சார்ந்த மற்றும் கனிமம் சார்ந்த தொழிலகங்கள்
10. மும்பை இந்தியாவின் மான்செஸ்டர் என்றழைக்க காரணம் யாது?

# குடிமையியல்

## குறு வினாக்கள்

**கொடுக்கப்பட்ட வினாக்கள் சிறு மாதிரிகள் மட்டும்தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் வினாக்களை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.**

1. உலக அமைதியை நிலைநாட்டுவதில் இந்தியாவின் பங்கு யாது?
    - சூயஸ் கால்வாய் பிரச்சினையைத் தீர்த்தது.
    - காங்கோ உள்நாட்டுப் பிரச்சினையில் அமைதி ஏற்படுத்தியது.
    - சைப்ரஸ் தீவில் அமைதியை நிலை நாட்டியது.
2. உலக அமைதி அவசியம் ஏன்?
    - உலக நாடுகளின் பொருளாதார வளர்ச்சிக்கு உலக அமைதி அவசியம்
    - உலகில் ஒற்றுமை ஏற்பட உலக அமைதி அவசியம்
3. இன ஒதுக்கல் கொள்கை பற்றி குறிப்பு வரைக?
    - இது ஆப்பிரிக்காவில் பின்பற்றப்பட்ட கொள்கை
    - நெல்சன் மண்டேலாவின் முயற்சியால் 1990 ல் இது முடிவுக்கு வந்தது.
4. ஜனநாயகம் பற்றி லிங்கனின் கருத்து யாது?
    - மக்களால், மக்களுக்காக, மக்களே ஆட்சி புரிவது.
5. தேசிய கட்சிகள் என்றால் என்ன? அவை யாவை?
    - நாடாளுமன்றத்தில் பதிவு செய்யப்பட்ட வாக்குகளில் 6 % மேல் பெற்ற கட்சிகள் (நான்கு மாநிலங்களுக்கு மேல்)
    - எகா : காங்கிரஸ், பா.ஜ.க
6. இந்தியாவின் கலை , கட்டிடக்கலை பற்றி கூறுக?
    - அஜந்தா, எல்லோரா ஓவியங்கள் உலகப் புகழ் பெற்றவை.
    - காந்தாரக் கலை மற்றும் சிற்பக்கலை இந்தியாவின் கலைக்கு உதாரணமாகும்.
    - இந்திய கோயில்கள் கட்டிடக் கலைக்கு சிறப்பு பெற்றது.
7. மனித இனத்தின் அருங்காட்சியகம் என இந்தியர்கள் அழைக்கப்படுவது ஏன்?
    - இந்தியாவில் உள்ள 100 கோடிக்கும் மேற்பட்ட மக்கள் ஜாதி , மதம், மொழி மற்றும் இனத்தை பற்றி படிக்கக் கூடிய அருங்காட்சியமாகவும், ஆய்வகமாகவும் திகழ்வதால் மனித இனத்தின் அருங்காட்சியகம் என இந்தியர்கள் அழைக்கப்படுகிறார்கள்.
8. தேர்தல் ஆணையத்தின் பணிகள்
    - அரசியல் கட்சிகளுக்கு அங்கீகாரம் அளித்தல்
    - தேர்தல் சின்னங்களை ஒதுக்குதல்
    - பொதுத்தேர்தல் நடத்துதல்

**பத்தி வினாக்கள்**

**கொடுக்கப்பட்ட விரிவான விடைகள் சிறு மாதிரிகள் மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் விரிவான விடையை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.**

1. பஞ்சசீலம், அணிசேராக் கொள்கை விவரி?

**பஞ்சசீலம் :**

- பிற நாட்டின் ஒற்றுமையை மதிக்க வேண்டும்.
- பிற நாட்டைத் தாக்கக் கூடாது.
- பிற நாட்டின் உள் விவகாரங்களில் தலையிடக் கூடாது.
- பிற நாடுகளுடன் நல்லுறவு கொண்டிருக்க வேண்டும்.
- பிற நாடுகளுடன் அமைதியான முறையில் இணங்கி இருத்தல் வேண்டும்

**அணிசேராக் கொள்கை :**

- இரண்டாம் உலகப் போருக்குப் பின் உலகம் இரண்டு அணிகளாகப் பிரிந்தது.
- அமெரிக்கா தலைமையில் ஓர் அணி, ரஷ்யா தலைமையில் ஓர் அணி
- இந்தியா இரண்டு அணிகளிலும் சேராமல் நடுநிலைமை வகிக்கிறது.இதற்கு அணி சேராக் கொள்கை என்று பெயர்.
- இதன் மூலம் இந்தியா உலகில் அமைதியை நிலை நாட்டி வருகிறது.

2. ஜனநாயகத்தில் எதிர்க்கட்சியின் பங்குகள் பற்றி விவரி?

- மக்களாட்சியின் வெற்றி எதிர்க்கட்சிகளின் செயல்பாட்டை ஒட்டி அமைகிறது.
- ஆளுங்கட்சிக்கு அடுத்தபடியாக அதிக இடங்களைப் பெறும் கட்சி எதிர்க் கட்சியாகும்.
- எதிர்க்கட்சித் தலைவர், ஆளுங்கட்சி அமைச்சருக்கு சமமான அதிகாரமுடையவர்.
- ஆளுங்கட்சியின் செயல்பாடுகளை கண்காணித்து நிறை குறைகளை வெளிப்படுத்துவது இவர்களுடைய வேலை ஆகும்.
- ஆளுங்கட்சியினரை விமர்சிப்பதால், அதிகாரங்களை தவறாக பயன்படுத்துவதற்கு எதிர்கட்சிகள் தடையாக உள்ளன.

**கூடுதல் வினாக்கள்**

1. நுகர்வோரைப் பாதுகாக்க தமிழக அரசு மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை?
2. தேர்தல் முறையை குறிப்பிட்டு விளக்கம் தருக.
3. இந்தியா ஐநாவின் தீவிர ஆதரவாளர் இக்கூற்றை நியாயப்படுத்துக.
4. ஜனநாயகத்தின் வகைகள் மற்றும் முக்கியத்துவம் - விளக்குக.
5. நுகர்வோர் உரிமைகள் பற்றி எழுதுக.

# பொருளியல்

## குறுவினாக்கள்

**கொடுக்கப்பட்ட வினாக்கள் சிறு மாதிரிகள் மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் வினாக்களை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.**

1. நாட்டு வருமானத்தை வரையறு?
   - ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு
2. தலா வருமானம் என்றால் என்ன?
   - ஒரு நாட்டின் வருமானத்தை மொத்த மக்கள் தொகையால் வகுத்தால் கிடைப்பது தலா வருமானம் ஆகும்.
3. தாராளமயமாதல் என்றால் என்ன?
   - தனியார் மற்றும் பொதுத்துறை நிறுவனங்களின் விதிகளை தளர்த்துதல் ஆகும்.
4. கலப்பு பொருளாதாரம் பற்றி கூறுக?
   - நிறுவனங்களை அரசும் , தனியாரும் சமமாக நிர்வாகம் செய்வதாகும்.

### பத்திவினாக்கள்

**கொடுக்கப்பட்ட விரிவான விடை சிறு மாதிரிகள் மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் விரிவான விடையை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.**

1. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகளை விவரி?
   1. **உற்பத்தி முறை**
   2. **வருமான முறை**
   3. **செலவின முறை**

**உற்பத்தி முறை :**

- ஒரு நாட்டில் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருள்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு.

**வருமான முறை :**

- ஒரு நாட்டின் அனைத்து மக்களின் வருமானத்தைக் கொண்டு கணக்கிடப்படுகிறது.

**செலவின முறை :**

- மக்களின் நுகரும் பொருட்களுக்கான செலவு , முதலீடு , சேமிப்பு ஆகிய மூன்றின் அடிப்படையில் கணக்கிடப்படுகிறது.

### கூடுதல் வினாக்கள்

1. தலையிடாக் கொள்கை - குறிப்பு வரைக
2. உலகமயமாதல் என்றால் என்ன?
3. பசுமைப் புரட்சியை விளக்குக
4. 11 – வது ஐந்தாண்டுத் திட்டத்தின் நோக்கங்களை எழுதுக.
5. தமிழ்நாட்டின் மின்சக்தி திட்டங்களை விவரி.

# வரலாறு

## தலைப்பு வினாக்கள்

கொடுக்கப்பட்ட தலைப்பு வினாக்கள் **சிறு மாதிரிகள்** மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் தலைப்பு வினாக்களை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

1. பிளாசி மற்றும் பக்சார் போர்
   - அ. 1757 ம் ஆண்டு வங்காளத்தின் நவாப்பாக இருந்தவர் யார்?
     சிராஜ் உத்-தௌலா
   - ஆ. துணைப் படைத் திட்டத்தினை அறிமுகப்படுத்தியவர் யார்?
     வெல்லெஸ்லி
   - இ. டல்ஹௌசி பிரபுவின் கொள்கை யாது? -- வாரிசு இழப்புக் கொள்கை
   - ஈ. விக்டோரியா மகாராணியின் பிரகடனம் எப்பொழுது வெளியிடப்பட்டது? -- 1858
2. பிராங்களின் டி.ரூஸ்வெல்ட்
   - அ. ஜனாதிபதி தேர்தல் எப்பொழுது நடைபெற்றது? -- 1932
   - ஆ. பிராங்களின் டி ரூஸ்வெல்ட் எவ்வாறு அழைக்கபட்டார்? -- **எப்.டி. ரூஸ்வெல்ட் (F.D.R)**
   - இ. அவரது தேர்தல் அறிக்கை யாது?
     **“அமெரிக்க மக்களுக்குப் புதிய பயனுரிமை கொள்கையை அர்ப்பணிக்க நான் உறுதி அளிக்கிறேன். ’**
   - ஈ. அவர் உருவாக்கிய கொள்கையின் பெயர் என்ன?
     புதிய பயனுரிமை **என்ற புதிய சீரமைப்புக்கொள்கை.**
3. மத்திய இந்தியாவில் பெரும் புரட்சி
   - அ. மத்திய இந்தியாவில் பெரும் புரட்சியை வழிநடத்திச் சென்றவர் யார்?
     ஜான்சிராணி இலட்சுமிபாய்
   - ஆ. இராணி இலட்சுமிபாய் கைப்பற்றிய நகரம் எது? -- குவாலியர்
   - இ. இராணி இலட்சுமிபாயின் முடிவு என்ன? – கொல்லப்பட்டார்
   - ஈ. தாந்தியா தோப்பிற்கு நிகழ்ந்தது என்ன? -- கைதுசெய்யப்பட்டு கொல்லப்பட்டார்
4. ஜாலியன் வாலாபாக் படுகொலை
   - அ. கைது செய்யப்பட்ட முக்கியமான தலைவர்கள் யார்? —
     சத்தியபால் , சாய்புதின் கிச்லு
   - ஆ. மக்கள் எங்கு கூடினர்? — அமிர்தசரஸ் - ஜாலியன் வாலாபாக் தோட்டம்
   - இ. அமிர்தசரஸில் ஆங்கில இராணுவ தளபதி யார்? -- ஜெனரல்.ஓ.டயர்
   - ஈ. இரவீந்திரநாத் தாகூர் செய்தது என்ன? -- நைட்வுட் பட்டத்தை துறந்தார்
5. கே. காமராஜர்
   - அ. காமராஜர் எப்படி அரசியலில் நுழைந்தார்? – வைக்கம் போராட்டம் மூலம்
   - ஆ. 1930 ல் எங்கு சிறையில் அடைக்கப்பட்டார்? – அலிப்பூர் சிறை
   - இ. 1947 ம் ஆண்டு இந்திய தேசிய கொடியை எங்கு ஏற்றினார்? –
     திருமயம் சத்திய மூர்த்தி வீட்டில்
   - ஈ. காமராஜர் எப்பொழுது இறந்தார்? – 1975

**குறுவினாக்கள்**

கொடுக்கப்பட்ட வினாக்கள் **சிறு மாதிரிகள்** மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் வினாக்களை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

1.ஏகாதிபத்தியம் - வரையறு

ஒருநாடு (வல்லரசு) பிற நாடுகளின் அரசியலிலும் பொருளாதாரத்திலும் தங்கள் ஆதிக்கத்தை நிலைநாட்டுதல்.

2. முதல் உலகப்போரின் உடனடிக்காரணம் யாது?

ஆஸ்திரிய இளவரசர் பெர்டினான்டு செர்பிய இளைஞனால் சுட்டுக்கொல்லப்பட்டார். செர்பியாவின் விளக்கம் ஆஸ்திரியாவிற்கு திருப்தி அளிக்காததால் போரைத் தொடங்கினர்.

3. பொருளாதார பெருமந்தத்தை F.D.R எவ்வாறு நிலைக்கு கொண்டு வந்தார்?
   புதியபயனுரிமை என்ற சீரமைப்புக் கொள்கையை உருவாக்கினார். உதவி, மீட்பு, சீர்திருத்தம் என்ற மூன்றின் மூலம் நிலைக்கு கொண்டு வந்தார்.
4. பாசிசத்தின் நான்கு தூண்கள் யாவை?
   ஒரே தலைமை , ஒரே கட்சி ஆட்சி, பயங்கரவாதம், பொருளாதார ஆளுமை பாசிசத்தின் நான்கு தூண்கள் ஆகும்.
5. இரண்டாம் உலகப்போரில் பங்கு பெற்ற இரு அணி நாடுகள் யாவை?
   இங்கிலாந்தின் தலைமையிலான நேச நாடுகள்
   ஜெர்மனியின் தலைமையிலான அச்சு நாடுகள்
6. 1857ஆம் ஆண்டு மாபெரும் கிளர்ச்சியின் உடனடிக் காரணம் யாது?
   பன்றி மற்றும் பசுவின் கொழுப்பு தடவிய என்பீல்டு ரகத் துப்பாக்கியைப் பயன்படுத்த கட்டாயப்படுத்துதல்.
7. பிரம்ம **ஞான சபையின் கொள்கைகளைப்** பற்றி கூறுக.
   மக்களிடையே சகோதரத்துவ உணர்வை வளர்க்கவும்,பண்டைய **சமயங்கள்,தத்துவங்கள் ,அறிவியல் மற்றும் இயற்கையின் நியதிகளை அறிந்து தெய்வீக சக்திகளை வளர்ப்பதாகும் .**
8. சுப்பிரமணிய பாரதியாரின் ஒரு சில பாடல்களை எழுதுக?
   வந்தே மாதரம்,**அச்சமில்லை அச்சமில்லை, எந்தையும் தாயும்,ஜெயபாரதம்**
9. காமராஜரின் **நலத்திட்டப்பணிகள்** பற்றி கூறுக
   **மதிய உணவுத்திட்டம், இலவசக்கல்வி வழங்குதல்,அணைகளைக்கட்டுதல், வேளாண்மையை மேம்படுத்துதல்**
10. மிதவாத, தீவிரவாத தலைவர்கள் நால்வரை கூறு
    **மிதவாத தலைவர்கள் :-** சுரேந்தரநாத் பானர்ஜி, தாதாபாய் நௌரோஜி, கோகலே, எம்.ஜி.ரானடே
    **தீவிரவாத தலைவர்கள் :-** திலகர், லாலா லஜபதிராய், பிபின் சந்திரபால் , அரவிந்த கோஷ்
11. ஆகஸ்டு நன்கொடை பற்றி கூறுக
    இங்கிலாந்து பாராளுமன்றத்தில் இந்தியர்க்கு பிரதிநிதிதுவம் .
    சின்ஹா என்பவர் 1940 ல் இந்திய பிரதிநிதியாகப் பங்கேற்றார்.
12. இந்தியா எவ்வாறு பிரிக்கப்பட்டது?
    சிந்து , மேற்கு பஞ்சாப் உள்ளிட்ட சில மாநிலங்கள் பாகிஸ்தான் என்றும் பிற பகுதிகள் இந்தியா என்றும் பிரிக்கப்பட்டது.
13. ஒப்படைப்பு முறைபற்றி கூறுக
    புதிய ஏகாதிபத்தியத்தின் இறுதி வழிமுறை.
    பிற்படுத்தப்பட்ட நாடுகள் , சர்வதேச சங்கம் மூலம் பிற நாடுகளிடையே ஒப்படைக்கப்படுதல்.

14. தைபிங் கலகம் பற்றி கூறுக
    1854 ல் சீனர்கள் தங்கள் அரசு மற்றும் வெளிநாட்டவர்களுக்கு எதிராக கலகம் செய்தனர் இதற்கு தைபிங் கலகம் என்று பெயர்.
15. முதல் அபினி போர் பற்றி கூறுக
    1800 ல் சீன அரசு அபினி வர்த்தகத்தை தடை செய்தது.
    1839 ல் ஆங்கிலேயர் அபினி வர்த்தகத்தை நடத்த சீன அரசின் மீது போர் தொடுத்தனர்.
    1842 நான்கிங் உடன்படிக்கையின் படி முடிவுற்றது.

16. தேசிய தொழில் மீட்புச்சட்டம் - குறிப்பு வரைக
    தேசிய தொழில் மீட்புச்சட்டத்தின் படி தொழிற்சாலைகளில் சம்பள உயர்வு, பணி நேரம் குறைப்பு போன்ற சீர்திருத்தங்கள் ஏற்பட்டன.
17. முசோலினியின் இரண்டு சாதனைகளை கூறுக
    இத்தாலியில் அமைதி, ஒழுங்கை நிலைநாட்டினார்.
    திறமையான நிர்வாகத்தின் மூலம் நிலையான அரசை ஏற்படுத்தினார்

18. மியூனிச் உடன்படிக்கை பற்றி குறிப்பு வரைக
ஹிட்லர் இங்கிலாந்தின் பிரதமர் சேம்பர்லைனுடன் மியூனிச் உடன்படிக்கை செய்து கொண்டார். அதன்படி ஜெர்மனி சூடட்டன்லாந்தை மட்டும் கைப்பற்ற அனுமதிக்கப்பட்டது.
19. அமெரிக்கா ஜப்பான் மீது ஏன் போர் தொடுத்தது?
ஜப்பான் முத்து துறைமுகத்தில் இருந்த அமெரிக்க கடற்படை தளத்தை தாக்கியது. எனவே அமெரிக்கா ஜப்பான் மீது போர் தொடுத்தது.
20. ஐ.நா வின் சாதனைகள் இரண்டினைக் கூறுக
ஈரான், ஈராக் ஆப்கானிஸ்தான் பிரச்சினைகளில் அமைதி கொண்டு வந்தது.
1963 அணு சோதனை தடைச்சட்டதை நிறைவேற்றியது.
21. வள்ளலாரின் போதனைகள் யாவை?
மனிதனுக்கு செய்யும் தொண்டே கடவுளை அடையும் வழி ஆகும்.
அணைத்து உயிகளிடத்தும் அன்பு காட்ட வேண்டும்.
மூடப்பழக்க வழக்கங்களை, உயிர்க்கொலையை வன்மையாக கண்டித்தார்.
22. இந்திய தேசிய காங்கிரசின் தோற்றம் பற்றி கூறுக
**ஆலன் ஆக்டேவியன் ஹியும்** என்பவரின் ஆலோசனையில் இந்திய தேசிய காங்கிரஸ் தோற்றுவிக்கப்பட்டது.
1885 ல் மும்பையில் **W.C பானர்ஜி** தலைமையில் முதல் கூட்டம் நடைபெற்றது.
23. ரௌலட் சட்டம் பற்றி கூறுக
1919 ல் இந்திய சுதந்திர போராட்டத்தை ஒடுக்க ரௌலட் சட்டம் கொண்டுவரப்பட்டது. இதன்படி எவரையும் உத்தரவின்றி கைது செய்யலாம், சிறையில் அடைக்கலாம்.
24. 1935 ம் ஆண்டு இந்திய அரசு சட்டம் புகுத்திய மாற்றங்கள் யாவை?
மத்தியில் கூட்டாட்சி , மாநிலங்களில் தன்னாட்சி ஏற்படுத்தப்பட்டது.
மாநிலங்களில் இரட்டை ஆட்சி ஒழிக்கப்பட்டது.
மத்தியில் கூட்டாட்சி நீதிமன்றம் நிறுவப்பட்டது.
கூட்டாட்சி ரிசர்வங்கி நிறுவப்பட்டது.
25. அரசை உருவாக்குபவர் என காமராஜர் கருதப்படுவது ஏன்?
1964 ல் நேருவிற்கு பிறகு லால்பகதூர் சாஸ்திரியையும், 1966 ல் இந்திரா காந்தியையும் இந்திய பிரதமர் ஆக்கினார். இதனால் அரசை உருவாக்குபவர் என காமராஜர் போற்றப்பட்டார்.

**பத்தி வினாக்கள்**

கொடுக்கப்பட்ட விரிவான வினாக்கள் **சிறு மாதிரிகள்** மட்டும் தான். தங்கள் மாணவர்களுக்கு ஏற்ற வண்ணம் விரிவான வினாக்களை வகைப்படுத்தி சுருக்கி அளித்தல் மாணவர்கள் நலனுக்கு உகந்ததாகும்.

1. **ஏகாதிபத்தியம் ஏற்படக் காரணங்கள் யாவை?**

- **தொழிற்புரட்சி** – தொழிலுக்கு தேவையான மூலப் பொருட்களுக்காக மற்றும் விற்பனை சந்தைகளுக்காக நாடுகள் தேவைப்பட்டன்
- **தேசியமயமாக்கல்** -- ஐரோப்பிய நாடுகள் தனது பெருமையை நிலைநாட்ட பிற நாடுகள் மீது ஆதிக்கம்
- **புதிய வழித்தடங்கள் கண்டுபிடிப்பு** – புதிய கடல் வழி தடங்கள், இராணுவம், வணிகர்கள் மூலம் குடியேற்ற நாட்டின் செல்வத்தை சுரண்ட உதவியாக இருந்தது.
- **மக்கள் தொகை பெருக்கம்** -- வேலையின்மை வேறுநாடுகளைத் தேடிச் செல்ல தூண்டியது.
- **வல்லமை சம நிலை** – ஐரோப்பிய நாடுகள் போட்டியாக உள்ள நாடுகள் மற்றும் அண்டை நாடுகளுக்கு இணையாக குடியேற்றங்களை ஏற்படுத்த முயலுதல்.

2. **இரண்டாம் உலகப்போரின் விளைவுகள் யாவை?**

- ஏராளமான உயிரிழப்பையும் பொருளாதார இழப்பையும் ஏற்படுத்தியது.
- இத்தாலி, ஜெர்மனி சர்வாதிகார ஆட்சி முடிவுக்கு வந்தது.
- பிரிட்டன், பிரான்ஸை இரண்டாம் நிலைக்கு தள்ளியது.
- ரஷ்யாவிற்கும், அமெரிக்காவிற்கும் பனிப்போர் தொடங்கியது.
- பிரிட்டீஷாரிடம் இருந்து ஆசிய, ஆப்பிரிக்க நாடுகள் சுதந்திரம் அடைந்தன.
- அமெரிக்காவிடம் இருந்து பிலிப்பைன்ஸ் தீவுகளும், பிரான்சிடம் இருந்து இந்தோ

சீனாவும், டச்சுவிடம் இருந்து இந்தோனேசியாவும் சுதந்திரம் பெற்றன.

- அமைதிக்காக ஐக்கிய நாடுகள் சபை உருவாயிற்று.

**கூடுதல் வினாக்கள்**

1. அமைச்சரவை தூதுக் குழு - குறிப்பு வரைக
2. ஒத்துழையாமை இயக்கத்தின் படிநிலைகளை கூறுக, கைவிடப்பட்டது ஏன்?
3. விடுதலைப் போரில் சுபாஷ்சந்திரபோஸ் மற்றும் இந்திய தேசிய இராணுவத்தின் பங்கினை விளக்குக.
4. வேலூர் கலகம் குறிப்பு வரைக
5. பெரியார் வைக்கம் வீரர் என ஏன் அழைக்கப்பட்டார்?
6. சுயமரியாதை இயக்கம்
7. ஏகாதிபத்தியம் உருவாகுவதற்கு காரணிகள்
8. பக்சார் புரட்சி
9. ஏகாதிபத்தியத்தின் விளைவுகள் யாவை?
10. சர்வதேச சங்கத்தின் அங்கங்கள் யாவை?
11. ஜெர்மனியின் பேராசை
12. உடனடிக் காரணம்
13. சர்வதேச சங்கம்
14. பாசிசக் கட்சி
15. அடால்ஃப் ஹிட்லர்
16. ஜப்பான் இரண்டாம் உலகப் போருக்கு காரணமாக அமைந்தது எவ்வாறு?
17. அழித்துப் பின்வாங்கும் கொள்கை பற்றி குறிப்பு வரைக
18. ஐ.நா.வின் அங்கங்களின் பணிகள் பற்றி குறிப்பிடுக.
19. ஐரோப்பிய ஒன்றியத்தின் அங்கங்களைப் பற்றி குறிப்பிடுக.
20. 1857 மாபெரும் புரட்சிக்கான சமூக சமயகாரணங்கள் யாவை?
21. விக்டோரியா ராணியின் பேறிக்கையின் முக்கியத்துவம் யாது?
22. கான்பூர் கிளர்ச்சி
23. 1857 பெரும்புரட்சிக்கான நிர்வாக, இராணுவக் காரணங்கள் விவரி
24. 1857ம் ஆண்டு புரட்சியின் விளைவுகள் யாவை?
25. பிரார்த்தனா சமாஜம் பற்றி குறிப்பு வரைக.
26. பிரம்ம சமாஜம்
27. ஆரிய சமாஜம்
28. பிரம்ம ஞானசபை
29. இராமகிருஷ்ண மடம்
30. இராமகிருஷ்ண மடத்தின் செயல்பாடுகளை விவரி
31. பாதுகாப்பு மன்றம் குறிப்பு வரைக

## வரலாறு

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. ஓவரா | --- | இரகசியக்காவல் படை |
| 2 நாசிசம் | ---- | ஜெர்மனி |
| 3. டியூஸ் | --- | முசோலினி |
| 4. இந்துசமய மார்டின் லூதர் | --- | சுவாமி தயானந்த சரஸ்வதி |
| 5. கேசரி | --- | பாலகங்காதர திலகர் |

6. செவ்ரஸ் உடன்படிக்கை --- துருக்கி
7.வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை --- ஜெர்மனி
8. பஞ்சாப் சிங்கம் --- லாலா லஜபதிராய்
9. இந்தியாவின் இரும்பு மனிதர்/பிஸ்மார்க்---சர்தார் வல்லபபாய் படேல்
10.வைக்கம் வீரர் --- ஈ.வே.ரா (பெரியார்)
11. வரைவுக்குழு தலைவர் --- பி.ஆர்.அம்பேத்கார்
12. எல்லை காந்தி --- கான் அப்துல் கபார்கான்
13. சௌரிசௌரா --- உத்திரப் பிரதேசம்
14. வள்ளலார் --- இராமலிங்க அடிகள்
15. இரண்டாம் கெய்சர் வில்லியம் --- ஜெர்மனி
16. மங்கள்பாண்டே --- பாரக்பூர்
17. மெயின் காம்ப் --- ஹிட்லர் (எனது போராட்டம்)
18. இந்தியாவின் விடிவெள்ளி --- இராஜாராம் மோகன்ராய்
19. அரசரை உருவாக்குபவர் --- காமராசர்
20. தேவதாசி முறை --- டாக்டர்.முத்துலெட்சுமி ரெட்டி
21. வீரத் தமிழன்னை --- டாக்டர்.தர்மாம்பாள்

## புவியியல்

1. பருவமழை வெடிப்பு --- ஜுன்–செப்டம்பர்
2. கரிசல் மண் --- பருத்தி/தக்காணம்
3. கோதுமை --- வண்டல்/பஞ்சாப்
4. சணல் தொழில் --- வங்காளம்/ஹுக்ளி
5. கிராமச்சாலை --- பஞ்சாயத்து
6. நார்வெஸ்டர்ஸ் --- இந்தியவின் வடகிழக்கு தலக்காற்று
7. பழுப்பு நிலக்கரி --- நெய்வேலி
8. வாகனத்தொழில் --- சென்னை
9. மாங்ரோவ் காடுகள் --- சுந்தரவனம்/ கங்கை கழிமுகம்.
10. ஆப்பிள் --- இமாச்சலபிரதேசம்
11. மென்பொருள் --- பெங்களூரு
12. இரப்பர் --- கேரளா
13. காற்றில் மிதக்கும் பலூன் --- பிரஞ்சு மேப்பியலார்
14. அதிக மழைபெறும் பகுதி --- மௌசின்ராம் / சிரபுஞ்சி
15. டி.ஐ.ஆர்.ஒ.எஸ் --- அமெரிக்கா
16. இரும்பு எஃகு தொழில் --- சோட்டா நாகபுரி /கனிம வட்டாரம்
17. மத்திய இரயில்வே --- மும்பை
18. தெற்கு இரயில்வே --- சென்னை
19. நில அளவை --- உலக அமைவிடம்
20. சர்க்கரை மண்டலம் --- உத்திரபிரதேசம்

## கோடிட்ட இடங்களை நிரப்புக

## வரலாறு

1. ஜெர்மனி மற்றும் இத்தாலி ஒன்றிணைக்கப்பட்ட ஆண்டு **1870**
2. சீனா அரசியல் ரீதியான சுதந்திரம் பெற்ற ஆட்சிக் காலம் **மஞ்சு ஆட்சிக் காலம்.**
3. ஆங்கில கிழக்கிந்திய வணிகக்குழு தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு **1600.**
4. பிரஞ்சு கிழக்கிந்திய வணிகக்குழுவை நிறுவியவர் **கால்பர்ட்.**
5. சீனக்குடியரசை நிறுவியவர் **டாக்டர் சன்யாட்சென்.**

6. உலகம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்தும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது என கூறியவர் **இரண்டாம் கெய்சர் வில்லியம்.**
7. ஜெர்மனியால் மூழ்கடிக்கப்பட்ட அமெரிக்காவின் புகழ்பெற்ற வணிக கப்பல் **லூசி டானியா.**
8. பொருளாதார பெருமந்தம் தோன்றிய நாடு **அமெரிக்கா**
9. பாசிச கட்சியை தோற்றுவித்தவர் **முசோலினி**
10. ஹிட்லர் வியன்னாவில் **பெயிண்டராக** பணியாற்றினார்.
11. இரண்டாம் உலகப்போருக்கு முக்கிய காரணமாக அமைந்த உடன்படிக்கை **வெர்செய்ல்ஸ் உடன்படிக்கை .**
12. முதல் உலகப்போருக்குப் பின் வல்லரசாக எழுச்சிபெற்ற நாடு **ஜப்பான்**
13. இரண்டாம் உலகப்போரின் போது பிரிட்டிஷ் பிரதமராக இருந்தவர் **சர் வின்ஸ்டன் சர்ச்சில்**
14. பிலீட்ஸ் கிரீக் என்பது **மின்னல் வேக போர்.**
15. ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு **1945.**
16. பன்னாட்டு நீதிமன்றம் அமைந்துள்ள இடம் **திஹேக்.**
17. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணயம் **யூரோ.**
18. 1857 ஆம் ஆண்டு பெரும்புரட்சியை ஆங்கில வரலாற்று அறிஞர்கள் **படைவீரர் கலகம்** அழைத்தனர்.
19. குடியானவர்கள் அதிகமாக செலுத்தவேண்டியவரி **நிலவரி.**
20. பொது இராணுவ பணியாளர் சட்டம் கொண்டுவரப்பட்ட ஆண்டு **1856.**
21. முதன் முதலில் புரட்சி வெடித்த இடம் **பாரக்பூர் .**
22. சீர்திருத்த இயக்கங்களின் முன்னோடியாக திகழ்ந்தவர் **இராஜாராம் மோகன்ராய்.**
23. சுவாமி தயானந்த சரஸ்வதியால் நிறுவப்பட்டது **ஆரிய சமாஜ்யம்.**
24. இராமகிருஷ்ண மடத்தின் தலைமையகம் **பேலூரில்** உள்ளது.
25. சர்.செய்யது அகமது கான் தொடங்கிய இயக்கம் **அலிகார் இயக்கம்.**
26. தமிழ்நாட்டின் தலைசிறந்த சமுதாய சீர்திருத்தவாதி **ஈ.வெ.இராமசாமி** .
27. இந்திய சமஸ்தானங்களை இணைக்கும் பணியை மேற்கொண்டவர் **சர்தார் வல்லபபாய் படேல்.**
28. சமயம் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளால் உருவானது **தேசியம்.**
29. முஸ்லிம்களுக்கு தனித்தொகுதிகளை அறிமுகப்படுத்திய சட்டம் **மிண்டோ மார்லி சீர்திருத்தச் சட்டம்**
30. பம்பாயில் தன்னாட்சி கழகத்தை தோற்றுவித்தவர் **திலகர்.**
31. சுதந்திர போராட்டத்தில் காந்திஜி உபயோகித்த புதிய யுக்தி முறை **சத்தியாகிரகம்.**
32. சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு தோற்றுவித்த கட்சி **சுய இராஜ்ஜியம்.**
33. இரண்டாம் உலகப்போரில் இந்தியர்களை ஈடுபடுத்தியவர் **லின்லித்கோ.**
34. நேரு இடைக்கால அரசை அமைக்க உதவி கோரியது **ஜின்னாவிடம்.**
35. இந்திய அரசியலமைப்பு சட்டம் நடைமுறைபடுத்தப்பட்ட ஆண்டு **1950 ஜனவரி 26.**
36. இந்தியாவின் முதல் குடியரசு தலைவர் **டாக்டர் இராஜேந்திர பிரசாத்.**

37. வேலூரில் இந்திய வீரர்களை ஆங்கிலேயர்களுக்கு எதிராக செயல்பட தூண்டியவர்கள் **திப்பு சுல்தானின் மகன்கள்.**
38. வேதாரண்யம் உப்பு சத்தியகிரகத்தை நடத்தியவர் **இராஜகோபாலாச்சாரியார்.**
39. வைக்கம் அமைந்துள்ள இடம் **கேரளா.**

## புவியியல்

1. பாக் நீர்சந்தி **ஸ்ரீலங்காவை** இந்தியாவிலிருந்து பிரிக்கிறது.
2. இந்தியாவின் நடுவே செல்லும் முக்கிய தீர்க்க கோடு **அலகாபாத்** நடுவே செல்கிறது.
3. இந்தியாவின் மிக உயரமான சிகரம் (K2) **காட்வின் ஆஸ்டின்.**
4. **இமய மலைகள்** பனி உறைவிடம் என அழைக்கப்படுகின்றன.
5. இந்தியாவின் தென் கிழக்கு திசையில் **வங்காள விரிகுடா** அமைந்துள்ளது.
6. இந்தியாவில் நிலவுவது வெப்பமண்டல **பருவக்காற்று காலநிலை.**
7. கடற்கரை பகுதிகளில் நிலவுவது **சமமான காலநிலை.**
8. மேற்கத்திய இடையூறுகளால் மழை பெறும் பகுதி **பஞ்சாப்.**
9. கோடை பருவத்தில் இந்தியாவின் வடகிழக்கு பகுதியில் வீசும் உள்ளூர் புயலின் பெயர் **நார்வெஸ்டர்ஸ்.**
10. வறண்ட நிலப்பகுதியில் காணப்படும் **பாலைமண்.**
11. பருவகாற்று காடுகள் **இலையுதிர் காடுகள்** என்றும் அழைக்கப்படுகின்றன.
12. மோனோசைட் மணலில் காணப்படும் தாது **யுரேனியம்.**
13. பருத்தி ஒரு **பணப்பயிர்**
14. வறட்சியிலும் வளரும் பயிர் **தினை வகை.**
15. நெல் அதிகமாக விளையும் மண் **வண்டல் மண்.**
16. தேயிலை மற்றும் காபி விளையும் இடம் **மலைச்சரிவுகள்.**
17. பருத்தி ஆலை ஒரு **வேளாண் சார்ந்த** தொழில்.
18. இந்தியாவின் மான்செஸ்டர் என்று அழைக்கப்படுவது **மும்பை.**
19. டாடா இரும்பு எஃகு அமைந்துள்ள இடம் **ஜாம்ஷெட்பூர்.**
20. சோடா நாகபுரி பீடபூமி **கனிம** வளத்திற்கு புகழ்பெற்றது.
21. மின்னியல் தலைநகரம் என அழைக்கப்படுவது **பெங்களூர்.**
22. நீர் மாசடைவதற்கு **கழிவு நீர்** காரணமாகும்.
23. ஓடைகளிலும் ஏரிகளிலும் இயற்கை சத்து அதிகரிப்பதற்கு **மிகையூட்ட வளமுறுதல்** எனப்படும்.
24. இயற்கை காற்று மாசடைவதற்கு முக்கிய காரணம் **வாகன புகை** ஆகும்.
25. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம் **உள்நாட்டு வணிகம்.**
26. நம் நாட்டில் குறைந்த செலவு மற்றும் அனைவராலும் பயன்படுத்தப்படும் போக்குவரத்து **சாலைவழி**
27. இந்திய ரயில் போக்குவரத்தின் தலைமையிடம் **டெல்லியில்** உள்ளது.
28. வேகம் மற்றும் விலை உயர்ந்த நவீன போக்குவரத்து **வான்வழி.**
29. வான்வழி புகைப்படங்களை பயன்படுத்தி வரையப்படும் வரைபடங்கள் **செங்குத்து படங்கள்** எனப்படும்.
30. மின்காந்தம் பிரதிபலிப்பதை கண்டறியும் கருவி **உணரி.**

## குடிமையியல்

1. இந்தியா அதிகப்படியான நம்பிக்கை கொண்டிருப்பது **அமைதி.**
2. இன ஒதுக்கல் கொள்கை முடிவுக்கு வந்த ஆண்டு **1990.**
3. தற்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற அரசாங்க முறை **மக்களாட்சி.**
4. தேர்தலில் போட்டியிட தேவையான வயது **25.**
5. உலக நுகர்வோர் தினமாக கொண்டாடப்படும் நாள் **மார்ச் 15.**

## பொருளியல்

1. முதன்மைத் துறை என்பது **<u>வேளாண்மைத்துறை</u>**.
2. தலா வருமானம் சுட்டிக்காட்டுவது மக்களின் **<u>வாழ்க்கை தரத்தை</u>**.
3. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறை **<u>மூன்று</u>**
4. இந்திய திட்டக்குழுவின் தலைவர் **<u>பிரதமர்.</u>**
5. பசுமைப் புரட்சி நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு **<u>1967</u>**

## பயிற்சி 1

## ஒரு மதிப்பெண் வினாக்கள் – சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. பாக்நீர் சந்தி ----------------------------------------வை இந்தியாவில் இருந்து பிரிக்கிறது.
   அ) ஸ்ரீலங்கா ஆ) மியான்மர் இ) மாலத்தீவு ஈ) இலட்சத்தீவுகள்
2. இந்தியாவின் நடுவே செல்லும் மிக முக்கிய தீர்க்கக்கோடு ---------------------------------------- நடுவே செல்கிறது.
   அ) அகமதாபாத் ஆ) அலகாபாத் இ) ஹைதராபாத் ஈ) ஔரங்காபாத்
3. உலகின் மிக உயரமான சிகரம் ----------------------------------------
   அ) எவரெஸ்ட் ஆ) நந்தாதேவி இ) கஞ்சன்ஜங்கா ஈ) தவளகிரி
4. இமயமலைகள் ------------------------------------- என அழைக்கப்படுகின்றன.
   அ) பனி உறைவிடம் ஆ) இமாச்சலம் இ) சிவாலித் ஈ) இமாத்ரி
5. இந்தியாவில் நிலவுவது ---------------------------------- காலநிலை.
   அ) மித வெப்ப மண்டலக் காலநிலை ஆ) வெப்ப மண்டலக் காலநிலை
   இ) வெப்ப மண்டல பருவக்காற்று காலநிலை ஈ) குளிர்காலநிலை
6. கடற்கரைப் பகுதிகளில் நிலவுவது ------------------------- காலநிலை.
   அ) கண்ட காலநிலை ஆ) சமமான காலநிலை இ) ஈரப்பத காலநிலை
   ஈ) வெப்பக் காலநிலை
7. தென்மேற்குப் பருவக்காற்று திசைக்கு இணையாக அமைந்த மலைகள் ---------------------------------
   அ) சாத்பூரா ஆ) ஆரவல்லி இ) விந்தியா ஈ) மைக்காலா
8. வறண்ட நிலப்பகுதியில் காணப்படும் மண் -------------------------------- ஆகும்.
   அ) பாலை மண் ஆ) சரளை மண் இ) கருப்பு மண் ஈ) வண்டல் மண்
9. பருவக்காற்றுக் காடுகள் ----------------------------------- என்றும் அழைக்கப்படுகின்றன.
   அ) அயன மண்டல பசுமை மாறா காடுகள் ஆ) இலையுதிர் காடுகள்
   இ) மாங்குரோவ் காடுகள் ஈ) மலைக்காடுகள்
10. மோனோ சைட் மணலில் பெருமளவில் காணப்படுவது ---------------------------------.
    அ) எண்ணெய் ஆ) யுரேனியம் இ) தோரியம் ஈ) நிலக்கரி
11. வங்காளத்தில் உள்ள சதுப்பு நிலக்காடுகள் -------------------- எனப்படுகின்றது.
    அ) சுந்தரவனம் ஆ) முட்புதர் காடு இ) மலைக்காடு ஈ) பசுமை மாறாக் காடு
12. ஒரு நாட்டின் எல்லைக்குள் நடைபெறும் வணிகம் ------------------------ எனப்படும்.
    அ) பல்கிளை வணிகம் ஆ) பண்ட மாற்று வணிகம் இ) உள்நாட்டு வணிகம்
    ஈ) பன்னாட்டு வணிகம்
13. நம்நாட்டில் குறைந்த செலவு மற்றும் அனைவராலும் பயன்படுத்தப்படும் போக்குவரத்து --------
    அ) சாலை வழி ஆ) வான் வழி இ) நீர்வழி ஈ) குழாய் வழி
14. வேகம் மற்றும் விலை உயர்ந்த நவீன போக்குவரத்து ----------------------------
    அ) வான் வழி ஆ) சாலைவழி இ) நீர் வழி ஈ) இரயில் வழி
15. பொருளைக் கண்டு பிடிக்கும் வழிமுறையை ---------------------------- என்றழைக்கிறோம்.
    அ) இலக்கு ஆ) மூலம் இ) உணரி ஈ) பதிமம்
16. மின்காந்தப் பிரதிபலிப்பதை கண்டறியும் கருவி --------------------------------
    அ) இலக்கு ஆ) உணரி இ) பொருள் ஈ) புகைப்படக்கருவி

17. வான்வழிப் புகைப்படங்களை பயன்படுத்தி வரையப்படும் வரைபடங்கள் ----------------------------------

அ) செங்குத்து ஆ) வான்வழி இ) இயற்கை ஈ) அரசியல்

18. வணிகக் கூட்டமைப்புகள் ------------------------------ வணிக வளர்ச்சியை எளிதாக்குகின்றன.

அ) பல்கிளை வணிகம் ஆ) பண்ட மாற்று வணிகம் இ) உள்நாட்டு வணிகம் ஈ) பன்னாட்டு வணிகம்

19. இந்திய இரயில் போக்குவரத்தின் தலைமையகம் உள்ள இடம் ------------------------

அ) மும்பை ஆ) புதுடெல்லி இ) நாக்பூர் ஈ) திருச்சி

20. மத்திய ரயில்வேயின் தலைமையிடம் -----------------------------------.

அ) மும்பை ஆ) புதுடெல்லி இ) ஹைதராபாத் ஈ) கொல்கத்தா

21. தெற்கு ரயில்வேயின் தலைமையிடம் -----------------------------------.

அ) சென்னை ஆ) அலகாபாத் இ) ஹைதராபாத் ஈ) மும்பை

22. இந்தியாவிற்கு ----------------------------------- திசையில் வங்காளவிரிகுடா அமைந்துள்ளது.

அ) மேற்கு ஆ) தெற்கு இ) தென்கிழக்கு ஈ) தென்மேற்கு

23. கர்நாடகாவில் உள்ள மேற்குத் தொடர்ச்சி மலைகள் -------------------- என அழைக்கப்படுகின்றன.

அ) சயத்ரி ஆ) ஆரவல்லி இ) எவரெஸ்ட் ஈ) ஆனைமலை

24. கங்கை ஆற்றின் பிறப்பிடம் -----------------------------------

அ) யமுனோத்ரி ஆ) சியாச்சின் இ) கங்கோத்ரி ஈ) காரக்கோரம்

25. கேரளாவில் உள்ள பெரிய ஏரி -----------------------------------

அ) சில்கா ஆ) வேம்பநாடு இ) கிருஷ்ணராஜ சாகர் ஈ) புலிகாட்

## பயிற்சி 2

## ஒரு மதிப்பெண் வினாக்கள் - சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. இந்தியா அதிகப்படியான நம்பிக்கையை கொண்டிருப்பது ---------------------------------

அ)போர் ஆ)அமைதி இ)அன்பு ஈ)பகைமை

2. நேருவின் அமைதிக்கான ஐந்து அம்சக் கொள்கைகள்----------------------------------

அ)சுதேசி ஆ)புதிய பயனுரிமை இ)பஞ்சசீலம் ஈ) இன ஒதுக்கல்

3. அணு ஆயுதத் தடைச் சட்டம் கையெழுத்தான ஆண்டு -------------------------------

அ)1963 ஆ) 1993 இ)1936 ஈ)1998

4. இனஒதுக்கல் கொள்கை முடிவிற்கு வந்த ஆண்டு --------------------------------

அ)1990 ஆ)1991 இ)1890 ஈ) 1989

5. சார்க் அமைப்பின் முதல் பொதுச் செயலாளர் ------------------------------

அ)ஜின்னா ஆ)அபுல் ஆசாத் இ)கோபி ஆனன் ஈ) காந்தி

6. தற்காலத்தில் மிகவும் பிரசித்தி பெற்ற அரசாங்க முறை ---------------------------

அ)குடியாட்சி ஆ)உயர் குடியாட்சி இ)மக்களாட்சி ஈ)சர்வாதிகாரம்

7. நேரடி மக்களாட்சி பழங்காலத்தில் நடைமுறையில் இருந்த நாடு ..............................

அ)கிரீஸ் ஆ)இத்தாலி இ)சார்டினியா ஈ) சைப்ரஸ்

8. தெலுங்கு தேசம் எனப்படுவது ..................................................................

அ)மாநிலக்கட்சி ஆ)தேசிய கட்சி இ)சர்வதேச கட்சி ஈ) கலாச்சார கட்சி

9. எதிர்க்கட்சித் தலைவருக்கு அளிக்கப்பட்டுள்ள அந்தஸ்து .........................................

அ)காபினட் அமைச்சர் ஆ)இணை அமைச்சர் இ)மாநில அமைச்சர் ஈ) அசைச்சரவை அமைச்சர்

10. தேர்தலில் வாக்களிக்கத் தகுதியான வயது ..................................................................

அ)21 ஆ)18 இ)25 ஈ) 35

11. தேர்தல் ஆணையருக்கு இணையாக அதிகாரம் கொண்டவர் ....................................

அ)உயர்நீதி மன்ற நீதிபதி ஆ)உச்ச நீதிமன்ற நீதிபதி இ)மாவட்ட நீதிபதி ஈ) மாஜிஸ்ட்ரேட்

12. மாநில தேர்தலை மேற்பார்வை செய்பவர் ..................................................................

அ)தலைமைத் தேர்தல் அதிகாரி ஆ)தலைமைத் தேர்தல் ஆணையர் இ)உச்ச நீதிமன்ற நீதிபதி ஈ) உயர் நீதிமன்ற நீதிபதி

13. தேர்தல் ஆணையம் அமைந்துள்ள இடம் ..........................................................

அ)சென்னை ஆ)மும்பை இ)முராதாபாத் ஈ) புதுடெல்லி

14. இந்தியாவில் அங்கீகரிக்கப்பட்ட அலுவலக மொழிகள் ..........................................

அ)25 ஆ) 23 இ)22 ஈ) 27

15. மொழி என்பது ..................................................

அ)போக்குவரத்து ஆ) நீர்பாசனம் இ)இணைப்புக்கருவி
ஈ) உணர்வுப் பூர்வமானது

16. புத்த பூர்ணிமா கொண்டாடுபவர்கள் ..........................................................

அ)இந்தியர்கள் ஆ)முஸ்லீம்கள் இ)சமணர்கள் ஈ)புத்த மதத்தினர்

17. தேம்பாவணியோடு தொடர்புடையது ..........................................................................

அ)இந்து ஆ)சீக்கியம் இ)கிறிஸ்தவம் ஈ) இஸ்லாம்

18. நாட்டு வருமானத்தின் மற்றொரு பெயர் ..............................................................

அ)உண்மை வருமானம் ஆ)பண வருமானம் இ)மொத்த நாட்டு உற்பத்தி
ஈ) பெயரளவு வருமானம்

19. நாட்டு வருமானத்தை கணக்கிடும் முறைகள் ..............................................................

அ)2 முறைகள் ஆ)3 முறைகள் இ) 4 முறைகள் ஈ) 5 முறைகள்

20. தலா வருமானம் சுட்டிக் காட்டுவது ..................................................................

அ)மக்களின் செல்வ நிலையை ஆ)மக்களின் ஏழ்மை நிலையை
இ)மக்களின் வாழ்க்கைத் தரத்தை ஈ) மக்களின் கல்வி நிலையை

21. இந்தியாவின் தலா வருமானம் ..................................................................

அ) 220 டாலர் ஆ) 950 டாலர் இ) 2930 டாலர் ஈ) 600 டாலர்

22. முதன்மைத் துறை என்பது ..................................................................

அ)வணிகம் ஆ)கட்டமைப்புத்துறை இ)வேளாண்மைத்துறை
ஈ)தொலைத்தொடர்புத்துறை

23. நிகர நாட்டு உற்பத்தி என்பது ..................................................................

அ) மொத்த நாட்டு உற்பத்தி – தேய்மானம் ஆ) நிகர நாட்டு உற்பத்தி – தேய்மானம்
இ) தலா வருமானம் – தேய்மானம் ஈ) மொத்த உள்நாட்டு உற்பத்தி – தேய்மானம்

24. நாட்டுவருமானம் கணக்கீடு என்பது ......................................................

அ)மொத்த பணமதிப்பு ஆ) உணவு தானிய உற்பத்தியின் மொத்த மதிப்பு
இ)தொழில் பண்டங்களின் மொத்த மதிப்பு ஈ) பண்டங்கள் மற்றும் பணிகளின் மொத்த மதிப்பு

25. இந்திய நாட்டு வருமானத்தில் முதன்மைத்துறையின் பங்களிப்பு ................................

அ) 15.8 % ஆ) 25.8 % இ) 58.4 % ஈ) 12.8 %

## பயிற்சி 3

## ஒரு மதிப்பெண் வினாக்கள் – சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. படித்த இந்தியர்களின் மொழியாக அமைந்தது ................................................

அ)பிரெஞ்ச் ஆ) ஆங்கிலம் இ) இந்தி ஈ)வங்காளம்

சமயம் மற்றும் சமூக சீர்திருத்தவாதிகளால் உருவானது ....................................

அ)தேசியம் ஆ) புரட்சி இ) கலகம் ஈ)கிளர்ச்சி

3. மிண்டோ-மார்லி சீர்திருத்தச் சட்டம் தனித் தொகுதிகளை .................................க்கு அறிமுகப்படுத்தியது.

அ)இந்துக்கள் ஆ)முஸ்லீம்கள் இ)சீக்கியர்கள் ஈ)கிறித்துவர்கள்

4. பம்பாயில் தன்னாட்சி கழகத்தினை தோற்றுவித்தவர் ...............................................

அ)நேரு ஆ)திருமதி . அன்னிபெசன்ட் இ) திலகர் ஈ)பாரதியார்

5. காந்திஜி உபயோகித்த புதிய யுக்தி முறை ..............................................

அ)சத்தியாகிரகம் ஆ)வெளிப்படைக்கொள்கை இ)நீண்ட பயணம்
ஈ) வன்முறை

6. சி.ஆர்.தாஸ் மற்றும் மோதிலால் நேரு தோற்றுவித்த கட்சி ..........................................

அ)கதர் ஆ)இந்திய தேசிய காங்கிரஸ் இ)சுயராஜ்யம் ஈ)அகாலிதளம்

7. இரண்டாம் உலகப் போரில் இந்தியர்களை ஈடுபடுத்தியவர் ....................................

அ)கானிங் பிரபு ஆ)டல்ஹௌசி இ)லின்லித்கோ ஈ)லிட்டன் பிரபு

8. நேரு இடைக்கால அரசை அமைக்க உதவி கோரியது ..................................................

அ)அபுல் கலாம் ஆசாத் ஆ)ஜின்னா இ)சலீமுல்லா கான் ஈ)கான் அப்துல் காபர்கான்

9. இந்தியாவின் முதல் மற்றும் கடைசி இந்தியகவர்னர் ஜெனரல் ...............................................

அ)மவுண்ட் பேட்டன் பிரபு ஆ)நேரு இ)இராஜகோபாலாச்சாரி ஈ)காமராஜர்

10. இந்திய சமஸ்தானங்களை இணைக்கும் பணியை மேற்கொண்டவர் ...........................

அ)டாக்டர். பி.ஆர்.அம்பேத்கார் ஆ)இராஜேந்திர பிரசாத் இ)இராஜாஜி ஈ)சர்தார் வல்லபாய்பட்டேல்

11. வேலூரில் இந்திய வீரர்களை ஆங்கிலேயருக்கு எதிராகச் செயல்படத் தூண்டியவர்--------

அ)ஹைதர் அலி ஆ)திப்பு சுல்தானின் மகன்கள் இ)சிவாஜி ஈ)ஷாஜகான்

12. வேதாரணயத்தில் உப்புச்சத்தியாக் கிரகத்ததை நடத்தியவர் .......................................

அ)டி.எஸ்.ராஜன் ஆ)பக்தவச்சலம் இ) இராஜகோபாலாச்சாரி ஈ)வ.உ.சி.

13. பிரிட்டீஷாரின் கைது ஆணைக்கு எதிராக பாரதியார் தப்பியோடியது .........................

அ)சென்னை ஆ)பெங்களுர் இ)ஹைதராபாத் ஈ)பாண்டிச்சேரி

14. 1940ல் காமராஜர் வார்தா சென்று ............................................ஐ சந்தித்தார்.

அ)நேரு ஆ)காந்திஜி இ)திலகர் ஈ)ஜின்னா

15. காமராஜரின் பிரபலமான கொள்கை ...........................................

அ)'எஸ்' திட்டம் ஆ) 'எல்' திட்டம் இ) 'கே' திட்டம் ஈ)'ஜெ' திட்டம்

16. வீரத்தமிழன்னை என்றழைக்கப்பட்டவர் ........................................................

அ) டாக்டர்.எஸ்.தர்மாம்பாள் ஆ)முத்து லட்சுமி ரெட்டி இ)அன்னிபெசன்ட் ஈ)சரோஜினி நாயுடு

17. தேயிலை மற்றும் காப்பி அதிகமாக விளையும் இடம் ..................................................

அ)மலைச்சரிவுகள் ஆ)சமவெளிகள் இ)கடற்கரைச் சமவெளிகள் ஈ)ஆற்றுப் பள்ளத்தாக்குகள்

18. வறட்சியிலும் வளரும் பயிர் ..........................................................

அ)நெல் ஆ)கோதுமை இ)சணல் ஈ)தினை வகை

19. பருத்தி ஒரு ..............................................................

அ)உணவுப்பயிர் ஆ) பணப்பயிர் இ)தோட்டப்பயிர் ஈ)தினைப்பயிர்

20. இந்தியாவின் மான்செஸ்டர் எனப்படுவது ......................................................

அ)டெல்லி ஆ)சென்னை இ)மும்பை ஈ)கொல்கத்தா

21. டாடா எஃகு நிறுவனம் அமைந்துள்ள இடம் .........................................................

அ)துர்காபூர் ஆ)பிலாய் இ)ஜாம்ஷெட்பூர் ஈ)பர்ன்பூர்

22. சோடா நாகபுரி பீடபூமி ......................................வளத்திற்கு புகழ் பெற்றது.

அ)இயற்கைத்தாவரம் ஆ)கனிம வளம் இ)வண்டல் மண் ஈ)பருத்தி

23. மின்னியல் தலைநகரம் எனப்படுவது .........................................................

அ)கான்பூர் ஆ)டெல்லி இ)பெங்களுரு ஈ)மதுரை

24. ஒடைகளிலும், ஏரிகளிலும் இயற்கை சத்து அதிகரிப்பது ............................................

அ) நீர் மாசடைதல் ஆ)மிகையூட்ட வளமுறுதல் இ)காற்று மாசடைதல் ஈ) ஒலி மாசடைதல்

25. காற்று மாசடைவதற்கு முக்கிய காரணம் ..................................................

அ) வாகனப்புகை ஆ)எரிமலை வெடிப்பு இ)அனல்மின் சக்தி நிலையம் ஈ) மிகையூட்ட வளமுறுதல்

## பயிற்சி 4

## ஒரு மதிப்பெண் வினாக்கள் – சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. ஜெர்மனி மற்றும் இத்தாலி ஒன்றிணைக்கப்பட்ட ஆண்டு ......................................

அ)1870 ஆ)1872 இ)1780 ஈ)1782

2. மூலப் பொருட்களின் தேவையை அதிகப்படியாக உருவாக்கியது ..................................

அ)தொழிற்புரட்சி ஆ)தகவல் தொழில்நுட்பப்புரட்சி இ)பிரெஞ்சுப்புரட்சி ஈ)வேளாண்மைப்புரட்சி

**2. சீனா அரசியல் ரீதியான சுதந்திரம் பெற்ற ஆட்சிக் காலம் ..........................................**

அ)சின் ஆட்சிக்காலம் ஆ) ஷாங் ஆட்சிக்காலம்
இ) சூ ஆட்சிக்காலம் ஈ) மஞ்சு ஆட்சிக்காலம்

**3. பொருள்களின் போக்குவரத்தினை அதிகரிக்கச் செய்தது ..............................................**

அ)இரயில்வே ஆ)சாலை இ)வான் ஈ)நீர்

**4. பிரெஞ்சு கிழக்கிந்திய வணிகக் குழுவை நிறுவியவர் ..................................................**

அ) 14ம் லூயி ஆ)கால்பர்ட் இ)16 ம் லூயி ஈ) டிபிராசா

**5. சீனக் குடியரசை உருவாக்கியவர் .........................................................................**

அ) டாக்டர் சன்யாட்சன் ஆ) சூ-யென் லாய்
இ) மா சே துங் ஈ) சியாங்கேஷேக்

**7. உலகம் முழுவதையும் ஆதிக்கம் செலுத்தும் திறமை ஜெர்மனிக்கு மட்டுமே உள்ளது எனக் கூறியவர். ---------------------------------------------**

அ) பிஸ்மார்க் ஆ) கெய்சர் இரண்டாம் வில்லியம் இ)ஹிட்லர் ஈ) முசோலினி

**8. பிரான்சு திரும்ப பெற விரும்பிய இடங்கள் ....................................................................**

அ) அல்சேஸ் மற்றும் லொரைன் ஆ)போஸ்னியா மற்றும் ஹெர்சகோவினா
இ)ஆஸ்திரியா மற்றும் ஹங்கேரி ஈ)எஸ்தோனியா மற்றும் லாட்வியா

**9. ஆஸ்திரிய பட்டத்து இளவரசர் ..........................................................................**

அ) பிரான்சிஸ் பெர்டினான்டு ஆ) பிரான்சிஸ் டியூக்
இ) பிரான்சிஸ் டி லெசப்ஸ் ஈ) பிரான்சிஸ் பேயாகன்

**10. ஜெர்மனியால் முழ்கடிக்கப்பட்ட அமெரிக்க வணிகக் கப்பல் ....................................**

அ) லுப்டாப் ஆ) ராயல் இ) லூசிட்டானியா ஈ)பெர்லின்

**11. முதல் உலகப் போரினை முடிவுக்கு கொண்டு வந்தது .....................................மாநாடு**

அ) லண்டன் அமைதி மாநாடு ஆ) ரோம் அமைதி மாநாடு
இ) பெர்லின் அமைதி மாநாடு ஈ) பாரிஸ் அமைதி மாநாடு

**12. பொருளாதாரப் பெருமந்தம் தோன்றிய நாடு .......................................**

அ) இங்கிலாந்து ஆ)அமெரிக்கா இ) பிரான்ஸ் ஈ) ஜெர்மனி

**13. அமெரிக்க பொருளாதாரம் இயல்பு நிலைக்குத் திரும்பியது ..........................ஆண்டு**

அ)1930 ஆ)1940 இ)1950 ஈ)1945

**14. பாசிசக் கட்சியை தோற்றுவித்தவர் .............................................................**

அ)ஹிட்லர் ஆ)முசோலினி இ)ஸ்டாலின் ஈ)லெனின்

**15. தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சிறந்த நிவாரணம் ........................................**

அ) சர்வதேச தொழிலாளர் அமைப்பு ஆ)ஆலைச்சட்டம்
இ) தொழிற்பட்டயம் ஈ) தொழிலாளர் ஒன்றியம்

**16. சர்வதேச சங்கத்தில் இருந்து முசோலினி விலகிய ஆண்டு .....................................**

அ) 1931 ஆ)1932 இ)1935 ஈ)1937

**17. கூட்டுப்படை வளம் மிக்க ..............................இடத்தை ஆக்கிரமிப்பு செய்தது.**

அ) ரைன்லாந்து ஆ) சூடட்டன்லாந்து இ)கிரீன்லாந்து ஈ)பின்லாந்து

**18. ஹிட்லர் வியன்னாவில் பணியாற்றியது ....................................................**

அ) பெயிண்டர் ஆ)தையல்காரர் இ)ஆசிரியர் ஈ)வங்கி ஊழியர்

**19. ஹிட்லர் எழுதிய நூல் ..................................................**

அ)எனது போராட்டம் ஆ)சுவஸ்திகா இ)கெஸ்டபோ ஈ) ∴பரர்

**20. கூட்டு நாடுகள் .................................... வருகையால் வலிமைபெற்றன.**

அ)ஆஸ்திரியா ஆ)அமெரிக்கா இ)பின்லாந்து ஈ)போலந்து

**21. ஒரு பொருளை முழுமையாகப் பயன்படுத்துவோர் ...........................................**

அ)உற்பத்தியாளர் ஆ)நுகர்வோர் இ)கடைக்காரர் ஈ)விவசாயி

**22. நுகர்வோரை ஏமாற்றுபவர் ....................................................................**

அ)மரவேலை செய்பவர் ஆ)விவசாயி இ)கடைக்காரர் ஈ)வியாபாரி

**23. உலக நுகர்வோர் தினம் ...................................**

அ)மார்ச் 15 ஆ) மார்ச் 16 இ) மார்ச் 14 ஈ) மார்ச் 11

**24. நுகர்வோரின் மகாசாசனம் ..........................................................**

அ) உலக சுகாதார நிறுவனம் ஆ) நுகர்வோர் பாதுகாப்புச்சட்டம்
இ) எக்ஸ்னோரா ஈ) உணவு மற்றும் வேளாண்மைக் கழகம்

25. நுகர்வோருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தக் கூடிய திட்டங்களில் ஒன்று -------------------------

அ) வன மகா உற்சவம் ஆ)ஆப்பரேசன் 21
இ)வர்த்தகக் கண்காட்சி ஈ) இராஜராஜன் 1000

## பயிற்சி 5

## ஒரு மதிப்பெண் வினாக்கள் – சரியான விடையைத் தேர்ந்தெடுக்க.

1. இரண்டாம் உலகப் போருக்கு முக்கிய காரணமாக அமைந்த உடன்படிக்கை ......................
அ)வெர்சேல்ஸ் உடன்படிக்கை ஆ) ரோம் உடன்படிக்கை
இ) லண்டன் உடன்படிக்கை ஈ) ஐ-லா-சபேல் உடன்படிக்கை
2. பிரான்சுக்கு கொடுக்கப்பட்ட நிலக்கரிச் சுரங்கம் .......................................
அ) ஜாரியா ஆ) சார் இ ) பொக்காரோ ஈ) ராணிகஞ்ச்
3. முதல் உலகப் போருக்குப் பின் வல்லரசாக எழுச்சி பெற்ற நாடு ........................
அ) சீனா ஆ) ஜப்பான் இ) இந்தியா ஈ) கொரியா
4. பிலீட்ஸ் கிரிக் என்றால் ..................................................
அ) மின்னல் போர் ஆ) பதுங்கு குழிப்போர் இ) நீர் மூழ்கிக் கப்பல் போர் ஈ) கொரில்லாப்போர்
5. ஐக்கிய நாடுகள் சபை தோற்றுவிக்கப்பட்ட ஆண்டு .............................................
அ)1955 ஆ)1945 இ)1965 ஈ)1975
6. பன்னாட்டு நீதிமன்றம் அமைந்தள்ள இடம் ......................................
அ) திஹேக் ஆ)பெர்லின் இ)ரோம் ஈ)டோக்கியோ
7. ஐ.நாவின் தலைமையகம் அமைந்துள்ள இடம் .................................................
அ) நியூயார்க் ஆ) பெர்லின் இ) டோக்கியோ ஈ) ரோம்
8. ஐரோப்பிய ஒன்றிய மன்றத்தின் முதல் நிரந்தரத் தலைவர் .....................................
அ) ராம்சே மேக்டொனால்டு ஆ) ஹெர்மன் வான் ராம்பே
இ) விஜயலட்சுமி பண்டிட் ஈ) பிஸ்மார்க்
9. ஐரோப்பிய ஒன்றியத்தின் ஒற்றை நாணயம் ...............................................
அ) டாலர் ஆ) யென் இ) யூரோ ஈ)பவுண்ட்
10. இந்திய வரலாற்றறிஞர்கள் 1857ம் ஆண்டு புரட்சியை அழைத்தது ............................
அ) சிப்பாய் கலகம் ஆ) பெரும்புரட்சி
இ) முதல் இந்திய சுதந்திரப்போர் ஈ) படைவீரர் கலகம்
11. குடியானவர்கள் அதிகமாக செலுத்த வேண்டியிருந்த வரி ..........................................
அ) நில வரி ஆ) சுங்க வரி இ) வருமான வரி ஈ) சேவை வரி
12. பொது ராணுவப் பணியாளர் சட்டம் கொண்டு வரப்பட்ட ஆண்டு ............................
அ)1856 ஆ)1857 இ)1858 ஈ)1859
13. முதன் முதலில் புரட்சி வெடித்தது ................................................
அ)மீரட் ஆ)பரேய்லி இ)பாரக்பூர் ஈ)கான்பூர்
14. அயோத்தி நவாபின் மனைவி ................................................................
அ) மும்தாஜ் பேகம் ஆ) பாத்திமா பேகம்
இ) பேகம் ஹஸ்ரத் மகால் ஈ) ரசியா சுல்தானா
15. மத்திய இந்தியாவில் புரட்சிக்குத் தலைமை வகித்தவர் ...............................................
அ) ராணி லட்சுமி பாய் ஆ)இரண்டாம் பகதூர் ஷா
இ)நானா சாகிப் ஈ) பேகம் ஹஸ்ரத் மகால்
16. சீர்திருத்த இயக்கங்களின் முன்னோடியாகத் திகழ்ந்தவர் ..........................................
அ) ராஜாராம் மோகன்ராய் ஆ) தயானந்த சரஸ்வதி
இ) கேசவ சந்திர சென் ஈ) தேவேந்திரநாத் தாகூர்
17. இராம கிருஷ்ண மடத்தின் தலைமையகம் அமைந்துள்ள இடம் ...............................
அ) காஞ்சிபுரம் ஆ) பேலூர் இ) மேலூர் ஈ) ஹம்பி
18. சர் சையது அகமது தான் தொடங்கியது ..................................................
அ) அலிகார் இயக்கம் ஆ) பிரம்ம ஞான சபை
இ) சமரச சுத்த சன்மார்க்க சங்கம் ஈ) முஸ்லீம் லீக்
19. கேரளாவைச் சேர்ந்த சிறந்த சமூக சீர்திருத்த வாதி .................................................
அ) ஸ்ரீ நாராயண குரு ஆ) குரு பிரசாத் இ) குருநானக் ஈ) குருசாயி

20. வைக்கம் வீரர் எனப்படுபவர் ..........................................................

அ) ஈ.வே.ராமசாமி நாயக்கர் ஆ) நேரு இ)காந்தி ஈ)இராஜாஜி

21. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டகாலம் ..................................................

அ)1956-1961 ஆ)1997-2002 இ)2002-2007 ஈ)2007-2012

22. இந்தியாவில் திட்டக்குழு அமைத்த ஆண்டு ......................................

அ)1962 ஆ)1950 இ)1956 ஈ)1949

23. நேருவால் ஏற்படுத்தப்பட்ட இந்திய பொருளாதாரம் ......................................................

அ) கலப்பப் பொருளாதாரம் ஆ) சமதர்ம பொருளாதாரம்

இ) முதலாளித்துவ பொருளாதாரம் ஈ) பணப் பொருளாதாரம்

24. பூமிதான இயக்கத்தை தொடங்கியவர் ...................................................................

அ) ஜெயப்பிரகாஷ் நாராயணன் ஆ) நேரு

இ) ஆச்சாரியா வினோபா பாவே ஈ) டாக்டர் ராஜேந்திர பிரசாத்

25. பசுமைப்புரட்சி நடைமுறைப்படுத்தப்பட்ட ஆண்டு ...................................................

அ)1981 ஆ)1991 இ)2001 ஈ)2010

## வரலாறு

**பொருத்துக.**

1. கர்நாடகப் போர்கள் - ஆப்பிரிக்கா
2. இனவெறிக் கொள்கை - துருக்கி
3. ஹாங்காங் தீவு - இந்தியாவில் பிரெஞ்சு ஆதிக்கம் முடிவு
4. செவ்ரேஸ் உடன்படிக்கை- பல்கேரியா
5. நியூலி உடன்படிக்கை - இங்கிலாந்து

1. ஜெர்மைன் உடன்படிக்கை- பிரிட்டன்
2. ஆர்லண்டோ - ஜெர்மனி
3. உட்ரோவில்சன் - இத்தாலி
4. கெய்சர் வில்லியம் - ஆஸ்திரியா
5. லாயிட் ஜார்ஜ் - அமெரிக்கா

1. ரோம் அணிவகுப்பு - முசோலினி
2. டியூஸ் - ஆளுநர்
3. ஓவரா - 1922
4. மெயின்கேம்ப் - ரகசிய காவல் படை
5. கெஸ்டபோ - எனது போராட்டம்

1. அழித்து பின்வாங்கும் கொள்கை- எதிர் வாக்கு
2. லூப்ட் வோப் - ஐ.நா தலைமையகம்
3. ரத்து செய்யும் உரிமை - ஜெர்மனி நீர் மூழ்கிக் கப்பல்
4. அட்லாண்டிக் சாசனம் - ரஸ்யா
5. நியூயார்க் - ரூஸ்வெல்ட்

1. மங்கள் பாண்டே - மகாசானம்
2. பெரும்புரட்சி - மத்திய இந்தியா
3. 2ம் பகதூர் ஷா - பாரக்பூர்
4. நானா சாகிப் - 1857
5. விக்டோரியா பேரறிக்கை - முகலாயப் பேரரசர்.

| | | |
|---|---|---|
| 1. இந்தியாவின் விடிவெள்ளி | - | சுவாமி தயானந்த சரஸ்வதி |
| 2. இந்து சமயத்தின் மார்டின்லூதர் | - | திலகர் |
| 3. கேசரி | - | சொந்தநாடு |
| 4. நியூ இந்தியா | - | இராஜா ராம் மோகன் ராய் |
| 5. சுதேசி | - | அன்னிபெசண்ட் அம்மையார். |

| | | |
|---|---|---|
| 1. வல்லபபாய் படேல் | - | கான் அப்துல் கபார்கான் |
| 2. பி. ஆர். அம்பேத்கர் | - | லாலா லஜபதி ராய் |
| 3. எல்லைக் காந்தி | - | சுதந்திர இந்தியாவின் முதல் கவர்னர் ஜெனரல் |
| 4. மவுண்ட் பேட்டன் பிரபு | - | சட்டவரைவுக் குழு தலைவர் |
| 5. பஞ்சாப் சிங்கம் | - | இந்தியாவின் பிஸ்மார்க் |

| | | |
|---|---|---|
| 1. சாணக்கியர் | - | ஈ.வே. ராமசாமி பெரியார் |
| 2. அரசை உருவாக்கியவர் | - | வேலூர் கழகம் |
| 3. தேவதாசி முறை ஒழிப்பு | - | இராஜ கோபாலச்சாரியர் |
| 4. பதேக் ஹைதர் | - | டாக்டர் முத்துலெட்சுமி ரெட்டி |
| 5. வைக்கம் வீரர் | - | கே. காமராஜ் |

## புவியியல்

**பொருத்துக.**

| | | |
|---|---|---|
| 1. புனித தலம் | - | தக்காணம் |
| 2. அதிக மழை பெய்யும் பகுதி | - | அக்டோபர் - நவம்பர் |
| 3. லாவா பீடபூமி | - | மௌன்சின்ராம் |
| 4. வடகிழக்கு பருவ காற்று காலம் | - | சதுப்பு நிலம் |
| 5. தராய் | - | கேதார் நாத் |

| | | |
|---|---|---|
| 1. கரிசல் மண் | - | பஞ்சாப் |
| 2. சதுப்புநிலக் காடுகள் | - | பருத்தி |
| 3. கோதுமை | - | ஹிமாசலபிரதேசம் |
| 4. ஆப்பிள் | - | கேரளா |
| 5. ரப்பர் | - | சுந்தரவனம் |

| | | |
|---|---|---|
| 1. சணல் தொழில் | - | தமிழ்நாடு |
| 2. சர்க்கரைக் கிண்ணம் | - | பெங்களூர் |
| 3. வடக்கு ரயில்வே | - | மேற்கு வங்கம் |
| 4. வாகனத் தொழில் | - | டெல்லி |
| 5. மென்பொருள் தொழில் | - | உத்திரப் பிரதேசம் |

| | | |
|---|---|---|
| 1. இரும்பு எஃகு தொழில்கள் | - | அமெரிக்கா |
| 2. நில அளவை | - | பிரெஞ்சு மேப்பியலாளர்கள் |
| 3. டி. ஐ.ஆர்ஓ.எஸ் | - | சூரியன் |
| 4. புதுப்பிக்க கூடிய வளம் | - | புவி தகவல் தொகுதி |
| 5. காற்றில் மிதக்கும் பலூன் | - | சோடாநாகபுரி பீடபூமி |

1. பழுப்பு நிலக்கரி - தலக்காற்று
2. கரிசல் வட்டாரம் - வட கிழக்கு பருவக்காற்று
3. பருவமழை வெடிப்பு - தக்காணப்பீடபூமி
4. பின்னடையும் பருவக் காற்று- நெய்வேலி
5. நார் வெஸ்டர்ஸ் - ஜூன் முதல் செப்படம்பர் வரை.

## காலக்கோடு

| | |
|---|---|
| 1905 | வங்கப்பிரிவினை |
| 1907 | சூரத் பிளவு |
| 1909 | மிண்டோ – மார்லி சீர்திருத்தம் |
| 1914 | முதல் உலகப்போர் தொடக்கம் |
| 1919 | ரௌலட் சட்டம் |
| 1920 | ஒத்துழையாமை இயக்கம் |
| 1922 | சௌரா சௌரா சம்பவம் |
| 1927 | சைமன் குழு அமைப்பு |
| 1930 | சட்டமறுப்பு இயக்கம் |
| 1935 | இந்திய அரசுச் சட்டம் |
| 1940 | ஆகஸ்டு நன்கொடை |
| 1942 | வெள்ளையனே வெளியேறு இயக்கம் |
| 1947 | இந்திய சுதந்திர தினம் |
| 1950 | இந்திய குடியரசு தினம் |

## வரலாறு - வரைபடம்

**ஆசிய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**

1.துருக்கி 2.அரேபியா 3.ஈரான் 4. நேபாளம் 5. சிங்கப்பூர் 6. ஜப்பான் 7. சாகலின் தீவுகள் 8.மஞ்சூரியா 9. மங்கோலியா 10. கொரியா 11. காண்டன் 12. தைவான் 13.பீகிங் 14. நான்கிங் 15. ஹாங்காங்

## புவியியல் - வரைபடம்

**இந்திய வரைப்படத்தில் பின்வருவனவற்றைக் குறிக்கவும்.**

1. மும்மை 2. கொச்சி 3. சென்னை 4.. விசாகப்பட்டினம் 5.கொல்கத்தா 6. டெல்லி 7. நெல், நெல், கரும்பு, சணல், பருத்தி, கோதுமை 8. தேயிலை/காபி 9. தார்பாலைவனம் 10. ஏவரெஸ்ட்/K2 11. மௌசின்ராம் (சிரபுஞ்சி) 12. தக்காணம் / சோடா நாகபுரி 13. மேற்குதொடர்ச்சி மலைகள்/கிழக்குத் தொடர்ச்சி மலைகள் 14. தூத்துக்குடி 15. ஹைதரபாத் 16.பெங்களுரு17.கோவா 18. திருவனந்த புரம் 19. நேபாளம் 20. தொட்டபெட்டா

பிற: 1. அந்தமான் - நிக்கோபார் தீவுகள் 2. குர்சிகார் (அபு) 3. ரான் ஆப் கட்ச் 4. பாரதீப் 5. சாலை / இருப்புப்பாதை / விமானவழி 6. மும்பை – சென்னை – கடல்வழி (கொச்சி ) 7. மங்களுர்

## வினாத்தாள் அமைப்புமுறை – விவரம்

<table>
<tr><th></th><th>பாடத் தலைப்பு</th><th>ஆ<br>1</th><th>ஆ<br>2</th><th>இ<br>2</th><th>ஈ<br>5</th><th>மொத்த மதிப்பெண்கள்</th></tr>
<tr><td rowspan="4">புவியியல்</td><td>1. இந்தியா அமைவிடமும் இயற்கையமைப்பும்<br>2. இந்தியா காலநிலை</td><td>2</td><td>2</td><td>2</td><td rowspan="2">1</td><td rowspan="2">21</td></tr>
<tr><td>3. இந்தியா இயற்கை வளங்கள்</td><td>2</td><td>1</td><td>1</td></tr>
<tr><td>7. இந்தியா வணிகம் போக்குவரத்து மற்றும் தகவல்தொடர்பு</td><td>2</td><td>1</td><td>2</td><td>1</td><td>13</td></tr>
<tr><td>8. தொலை நுண்ணுணர்வு</td><td>1</td><td>1</td><td>-</td><td>1</td><td>8</td></tr>
</table>

புவியியலில் முதல் 3 பாடங்கள் மற்றும் கடைசி 2 பாடங்கள் படித்தால் குறைந்தது 20 மதிப்பெண்கள் பெறலாம். குறிப்பாக வேறுபாடுகள் நான்கு இப்பாடங்களில் வந்துவிடும். குறிப்பாக கிரீன்விச் நேரம், இந்திய திட்ட நேரம், வானிலை காலநிலை, லூ மற்றும் நார்வெஸ்டர்ஸ், ஏற்றுமதி இறக்குமதி. சிறு வினாக்களில் இமயமலையின் முக்கியத்துவம், அமைவிட சிறப்பு, இந்திய தீவுகள், இயற்கை வளங்கள், காலநிலையின் அம்சங்கள், பன்னாட்டு விமான நிலையங்கள் போன்றன.

பெருவினாவில் வேற்றுமையில் ஒற்றுமை, காடுகளின் முக்கியத்துவம், சாலை வழிகள், மழைநீர் சேகரிப்பு.

| | பாடத் தலைப்பு | ஆ 1 | ஆ 2 | இ 2 | ஈ 5 | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|
| குடிமையியல் | 2. மக்களாட்சி<br>3. வேற்றுமையில் ஒற்றுமை | 1 | 1 | - | 1 | 8 |
| | 1. இந்தியாவும் உலக அமைதியும் | 1 | 1 | - | 1 | 8 |
| பொருளியல் | 1. நாட்டு வருமானம் | 1 | 1 | - | 1 | 8 |

இதற்குக் குடிமையியல் மற்றும் பொருளியல் படித்தால் மட்டும் போதும். மக்களாட்சி, தேர்தல், தேர்தல் வகைகள், உள்ளாட்சி தேர்தல்கள், ஆட்சிமுறைகள், பண்பாடு, கலை, நடனம், இசை போன்றன குடிமையியலிலும். உலக அமைதிக்கு இந்தியாவின் பணி, பாண்டுங் மாநாடு, பஞ்சசீலக் கொள்கை, அணிசேரா இயக்கம், சார்க் அமைப்பு மற்றும் கொள்கைகள் போன்றனவும் படித்தால் 16 மதிப்பெண்கள் பெறலாம். நாட்டு வருமானம் கணக்கிடும் வழிமுறைகளை மட்டும் படித்தால் 8 மதிப்பெண்களும் ஆக குறைந்தது 20 மதிப்பெண்கள் பெறலாம். கூடுதலாக 40 மதிப்பெண்கள் கிடைக்கும்.

| | பாடத் தலைப்பு | ஆ 1 | ஆ 2 | இ 4 | ஈ 5 | மொத்த மதிப்பெண்கள் |
|---|---|---|---|---|---|---|
| வரலாறு | 11. இந்திய விடுதலை இயக்கம் முதல்நிலை<br>12. இந்திய விடுதலை இயக்கம் 2ம்நிலை<br>13. இந்திய விடுதலை இயக்கத்தில் தமிழ்நாட்டின் பங்கு | 1 | 2 | 1 | 1 | 16 |
| | 14. தமிழ்நாட்டில் சமுதாய மாற்றங்கள் | 2 | | | | |
| புவியியல் | 4. இந்தியா வேளாண்தொழில்<br>5. இந்தியா தொழிலகங்கள்<br>6. சுற்றுசூழல் பிரச்சனைகள் | 2 | 1 | இ<br>1 | 1 | 6 |

இதற்கு வரலாற்றின் கடைசி 4 பாடங்களும், புவியியலில் இதர பாடங்களும் படிக்க வேண்டும். வரலாற்றில் தலைப்பு வினாக்கள் 2 வினாக்கள் இவற்றில் இருந்து வந்துவிடும். வரலாற்றை நடத்தும்போது காலக்கோடு 5 மதிப்பெண்கள் வந்துவிடும். மேலும் 1905இல்

இருந்து 1950 வரை உள்ள காலங்களில் நிகழ்வுகளை கொண்டு 2 மதிப்பெண்கள் வினாக்கள் 4 இவற்றில் இருந்து எழுதலாம். அதே போன்று புவியியலில் 5 மதிப்பெண் வினா இவற்றில் இருந்து வந்துவிடும்.

பெருவினாக்களில் ஒத்துழையாமை இயக்கத்தின் நிலை, வட்ட மேசை மாநாடுகள், ஜாலியன் வாலாபாக் படுகொலை மற்றும் டாட்டா இரும்பு எஃகாலைகள், மும்பை ஒரு மான்செஸ்டர்.

<table>
<tr><th></th><th>பாடத் தலைப்பு</th><th>ஆ<br>1</th><th>ஆ<br>2</th><th>இ<br>4</th><th>ஈ<br>5</th><th>மொத்த<br>மதிப்பெண்கள்</th></tr>
<tr><td rowspan="3">வரலாறு</td><td>1. ஏகாதிப்பத்தியம்</td><td>1</td><td rowspan="3">2</td><td rowspan="2">1</td><td rowspan="3">1</td><td rowspan="3">20</td></tr>
<tr><td>2. முதல் உலகப்போர்</td><td>1</td></tr>
<tr><td>3. பொருளாதார பெருமந்தம்<br>4. இத்தாலியில் பாசிசம்<br>5. ஜெர்மனியில் நாசிசம்</td><td>1</td><td>1</td></tr>
<tr><td>குடிமையியல்</td><td>4. நுகர்வோர் உரிமைகள்</td><td>1</td><td>-</td><td>-</td><td>1</td><td>6</td></tr>
</table>

இதில் வரலாற்றில் முதல் 5 பாடங்கள் அடங்குகின்றன. தலைப்பு வினாக்கள் மற்றும் சிறு வினாக்களுக்கு 15 மதிப்பெண்கள் கிடைக்கும். அபினிப் போரின் காரணம், தைப்பிங் கலகம், முதல் உலகப்போரின் உடனடி காரணம், முசோலினியின் சாதனைகள், ஹிட்லர் ஆட்சியை பிடித்த விதம் போன்றன. பெருவினாக்களில் ஏகாதிபத்தியத்தின் விளைவு மற்றும் நுகர்வோரின் உரிமைகளும் கடமைகளும்.

<table>
<tr><th></th><th>பாடத் தலைப்பு</th><th>ஆ<br>1</th><th>ஆ<br>2</th><th>இ<br>4</th><th>ஈ<br>5</th><th>மொத்த<br>மதிப்பெண்கள்</th></tr>
<tr><td rowspan="3">வரலாறு</td><td>6. இரண்டாம் உலகப்போர்<br>7. ஐ.நா.சபை<br>8. ஐரோப்பிய ஒன்றியம்</td><td>1</td><td rowspan="3">2</td><td>1</td><td rowspan="3">1</td><td rowspan="3">16</td></tr>
<tr><td>9. 1857 மாபெரும் கிளர்ச்சி</td><td>1</td><td rowspan="2">1</td></tr>
<tr><td>10. சமூக சமய சீர்திருத்தங்கள்</td><td>1</td></tr>
<tr><td>பொருளியல்</td><td>2. விடுதலைக்குப்பின் இந்தியப் பொருளாதாரம்</td><td>2</td><td>1</td><td>-</td><td>2</td><td>14</td></tr>
</table>

இதில் வரலாறும் பொருளியலும் அடங்குகின்றது. இரண்டாம் உலகப்போர், வெர்சைல்ஸ் உடன்படிக்கை போரின் காரணங்கள் விளைவுகள், ஐ.நா.சபை தோற்றம்- பணி, 1857 மாபெரும் கிளர்ச்சி முக்கிய காரணம் மற்றும் சமூக சமய அரசியல் காரணங்கள் போரின் விளைவுகள், பிரம்ம சமாஜம், ஆரிய சமாஜம், ராமகிருஷ்ண மடம், அலிகார் இயக்கம் போன்றன. தலைப்பு வினாக்களில் இரண்டு இவற்றில் இருந்து வரும் மற்றும் பொருளியலில் வருமானம், கலப்பு பொருளாதாரம், தாராளமயம், உலகமயம், மற்றும் தமிழ்நாட்டின் 16 நலத்திட்டங்கள்.

வரைபடங்களில் ஆசியாவில் கொடுக்கப்பட்ட 15 இடங்களையும் மற்றும் புத்தகப்பக்கம் 6இல் உள்ள இடங்களையும் மீண்டும், மீண்டும் குறிக்கச் செய்யவும். இந்திய வரைபடத்தில் கொடுக்கப்பட்டுள்ள இடங்களை மீண்டும், மீண்டும் குறிக்கச் செய்யவும்.

அதே போன்று காலக்கோட்டினை கொடுக்கப்பட்ட நிகழ்வுகளை மீண்டும் மீண்டும் எழுத செய்யவும். பாட புத்தகத்தில் உள்ள புற வய 1 மதிப்பெண் வினாக்களை சிறிய சிறிய பகுதிகளாக பிரித்து மீண்டும் மீண்டும் எழுதச் செய்யவும். நிச்சயம் நமது கையில் 100 மதிப்பெண்கள் உண்டு.

குறிப்பு :

1. இரண்டு பாடங்களில் இருந்தும் (வரலாறு – பாட எண் 6, 7, 8 மற்றும் புவியியல் பாட எண் 4, 5, 6 ) ஏதேனும் ஒரு வினா கேட்கப்படும். உரிய மதிப்பெண் முதலில் வரும் பாடத்தில் இணைக்கப்பட்டுள்ளது.
2. வரலாற்றிலும் புவியியலிலும் வினாத்தாளில் 8 வினாக்கள் கொடுத்து 4 வினாக்கள் கேட்கப்படுவதால், அதற்கேற்ப ஆசிரியர்கள் வினாக்களைத் தயார் செய்திட அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

குறைந்த நிலையில் மதிப்பெண்கள் பெறும் மாணவர்களுக்கு உயர்ந்த மதிப்பெண்களைப் பெறமுடியும் என்ற நம்பிக்கையை ஏற்படுத்துகின்ற வகையில் சில வினாக்கள் இங்கே தொகுத்து வழங்கப்பட்டுள்ளன. வகைப்படுத்தப்பட்டுள்ள ஐந்து நிலைகளில் மாணவன் அரையாண்டுத் தேர்வில் பெற்ற மதிப்பெண்ணிலே எந்த நிலையில் இருக்கிறான் என்பதை அறிந்து, அவனை அடுத்தடுத்த நிலைகளுக்கு அழைத்து செல்வதே ஓர் ஆசிரியரின் நோக்கமாக இருக்க வேண்டும். அதற்காக இங்கு வழங்கப்பட்டுள்ள வினாக்கள் தவிர உள்ள பிற பகுதிகளில் உள்ள வினாக்களைத் தத்தம் மாணவர்கள் நிலையறிந்து தொகுத்து வழங்கித் தொடர்பயிற்சி அளிக்கலாம்.